Follow us:

# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 546 சுபகிருது வருடம், ஆனி மாதம் 06ஆம் திகதி திங்கட்கிழமை (20.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 19, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## உஷ்



வலுசக்தி அமைச்சர் காஞ்சன நடத்திய செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தமை தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் சர்ச்சைக்குரிய வகையில் விமர்சனங்கள் எழுந்துள்ளனவாம்.

ராஜபக்ஷக்களை முன்னிறுத்தினால் மக்கள் மத்தியில் மீண்டும் பழைய நினைவுகள் வந்துவிடும் என்பதால் சற்று அடக்கி வாசிக்குமாறு அரசியல்வாதிகள் பலர் அமைச்சர் காஞ்சனவிடம் தெரிவித்துள்ளதாக தகவல்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



எரிபொருள் பிரச்சினையில அமைச்சர் பேசுறத பார்க்கும்போது, சிறுபிள்ள வேளாண்ம வீடு வந்து சேராதுதான் போலக் கிடக்குது...

## சர்வதேச நாணய நிதிய குழு இன்று இலங்கை வருகிறது

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இன்று 20ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக அறிவித்துள்ளது.

குறித்த குழுவானது, இன்று 20ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை இலங்கையிலிருந்து இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்கு...

02 பக்கம்

# 3 நாட்களுக்கு வராதீர்!

## எரிபொருள் பெற்றுக்கொள்ள அலைமோதும் மக்களிடம் அமைச்சர் காஞ்சன பகிரங்க வேண்டுகோள்

யோ.தர்மராஜ்

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வரையறைக்கு உட்பட்ட வகையில் பெற்றோலை விநியோகிப்பதாலும் 23ஆம் திகதி ஒக்டென் 92 பெற்றோல் கப்பல் ஒன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கில் செயற்படுவதாலும் அத்தியாவசிய தேவைகளைத் தவிர்ந்து தேவையற்ற விதத்தில் எதிர்வரும் மூன்று நாட்களுக்கு பெற்றோலை பெற்றுக்கொள்வதற்காக யாரும் வரிசையில் நிற்கவேண்டாம் என வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

02 பக்கம்




## தெய்வங்கள் மனித வடிவிலும் வரலாம்...

சாவகச்சேரியில் உள்ள வர்த்தகர் ஒருவர் தனது கடையின் முன்னால் வைத்திருக்கும் விளம்பரப்பலகை இது.. மக்கள் பொருளாதார நெருக்கடியில் இருப்பதை அறிந்த அந்த வர்த்தகர், உதவும் மனப்பான்மையில் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறார். பொருட்களை பதுக்கி விற்று இலாபம் பார்க்கலாம் என்று வர்த்தகர்கள் அலைமோதும் இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு வர்த்தகர் இருப்பதை பலர் நேற்று வரவேற்றிருந்தனர்.

## எரிபொருள் தகவல் இணையம் நிறுத்தம்!

02 பக்கம்

## எரிபொருளுக்கு பதிலாக தண்ணீர்; கிளிநொச்சியில் மூவரிடம் மோசடி!

கிளிநொச்சி மாவட்டத்தில் கள்ளச்சந்தையில் எரிபொருள் வாங்க ஆசைப்பட்ட 3 பேர் சுமார் 77 ஆயிரம் ரூபா பணத்தினை பறிகொடுத்துள்ளனர். குறித்த சம்பவங்கள் கனகாம்பிகைகுளம், பாரதிபுரம், மலையாளபுரம் பகுதிகளில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

02 பக்கம்

## குறைந்த அதிகாரத்தை பாவிக்க பொலிஸாருக்கு ஆலோசனை

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ளும் நபர்கள் சம்பந்தமாக குறைந்த பட்ச அதிகாரத்தை பயன்படுத்துமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் ஏற்படும் குழப்பகரமான...

02 பக்கம்

## புதியவகை அடுப்புகளை அறிமுகம் செய்ய ஏற்பாடு



### அமைச்சர் ரமேஷ் பத்திரண தகவல்

சமையல் எரிவாயு பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் புதிய அடுப்பு வகைகளை அரசாங்கம் அறிமுகம் செய்யவுள்ளதாக கைத்தொழில் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அமைதியின்மை!

### இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு

முல்லைத்தீவு, விசுவமடு எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து. இராணுவத்தினர் வான நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வருமென எதிர்பார்த்து, கடந்த 2 நாட்களாக பெருமளவு மக்கள் வரிசையில் காத்திருக்கிறார்கள். எனினும், நேற்று முன்தினம் எரிபொருள் வரவில்லை.

02 பக்கம்

## வரிசைகளில் இதுவரை 13 பேர் உயிரிழப்பு

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு வரிசைகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 பக்கம்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் உட்பட்டோரை சந்தித்தார் பீரிஸ்

மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது அமர்வின் ஓரங்கமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் மற்றும் சீனா,

02 பக்கம்

## பஸ்ஸில் செல்ல பணமில்லை; ரயிலில் சென்று விபத்தில் பலி!

### மாத்தறை இளைஞருக்கு நேர்ந்த துயர்



மாத்தறையில் ரயிலில் ஏறும்போது தவறி விழுந்தமையினால் உயிரிழந்த இளைஞர் தொடர்பில் துயரமான பல தகவல்கள் வெளியாகியுள்ளன. 23 வயதான சந்தருவன் என்ற இளைஞனே நேற்று முன்தினம் நடந்த இந்த சம்பவத்தின்போது உயிரிழந்துள்ளார்.

02 பக்கம்

## அச்சுறுத்தும் சளிக்காய்ச்சல்; இதுவரை 14 மரணங்கள்!

### டெங்கு நோயாளர் வீதமும் அதிகரிப்பு

பருவகால இன்ஃப்ளுவன்ஸா ஏ சளிக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். இந்த காய்ச்சலினால் 14 பேர் உயிரிழந்துள்ளமை சுகாதார நிபுணர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

02 பக்கம்

## முதலில் தந்தையின் இறுதிச்சடங்கு; நேற்று தாயின் இறுதிக்கிரியைகள்!

### 26 வருடம் சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல்கைதியின் பரிதாப நிலை



யாழ். நிருபர்

26 வருடங்களாக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதி விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன் தனது தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

02 பக்கம்


மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

# மட்டக்களப்பில் எரிபொருள் கோரி மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு தாண்டவன்வெளி சந்தியில் எரிபொருள் கோரி மட்டக்களப்பு கொழும்பு வீதியை மறித்து நேற்று (19) காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றினர்.

குறித்த பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் நேற்று சனிக்கிழமை இரவு தொடக்கம் பெற்றோலுக்காக மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் உட்பட வாகனங்களுடன் மிக நீண்ட வரிசையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (19) காலை 10 மணிவரையில் காத்திருந்தனர்.







இதனை தொடர்ந்து குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இல்லை எனவும் பெற்றோல் இன்று வராது என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வரிசையில் காத்திருந்த மக்களிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து வரிசையில் காத்திருந்த மக்கள் வீதியின் சிக்னல் சந்தியை மறித்து வாகனங்களை செல்லவிடாது பெற்றோல் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து, இங்கு போக்குவரத்து தடைப்பட்டதுடன், பதற்ற நிலையும் ஏற்பட்டது.

இந்த பதற்ற நிலையையடுத்து சம்பவ இடத்துக்கு மட்டு. தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி பி.கே.ஹெட்டியாராச்சியின் தலைமையிலான கலகமடக்கும் பொலிஸார் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பெற்றோல் இன்று குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வரமாட்டாது. எனவே மக்கள் வீதியை விட்டுவிலகி வீடுகளுக்கு செல்லுமாறு கோரினர்.

அதனையும் பொருட்படுத்தாது வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து பொலிஸார் கலைத்து வெளியேற்றினர்.

## 3 நாட்களுக்கு...

வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சில் நேற்று (19) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு நாட்டின் எரிபொருள் நெருக்கடி குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சரவை உப குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 விநியோகஸ்தர்களிடமிருந்து தற்போது விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமையவே, 23, 24ஆம் திகதி முதல் எரிபொருள் கப்பல்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். அதற்கு தேவையான நிதியையும் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். அதன்படி, மத்திய வங்கியினால் 90 மில்லியன் டொலர் விடுவிக்கப்பட்டுள்ளது.

புதிய விநியோகஸ்தர்கள் என்பதால் முதல் எரிபொருள் கப்பலை பெற்றுக்கொள்வதே மிகக் கடினமானதாக இருக்கும். எனவே, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் பெற்றோல் அடங்கிய இரு கப்பல்களை பெற்றுக்கொள்ளவே எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, தற்போது கையிருப்பிலுள்ள டீசலை எதிர்வரும் 10 நாட்களுக்கு எவ்வித தடையுமின்றி சந்தைகளுக்கு விநியோகித்து தற்போதுள்ள நெருக்கடியை தீர்க்க முடியும் என நினைக்கின்றோம். மேலும் இதுவரை பெற்றோல் கிடைக்கப்பெறாத எரிபொருள் நிலையங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படவுள்ளோம்.

அதேபோன்று, ஐ.ஓ.சி. நிறுவனத்தின் திருகோணமலை எண்ணெய் குதத்தில் 10 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை களஞ்சியப்படுத்தியுள்ளனர். ஆனால், சாதாரணமாக ஐ.ஓ.சி. நிறுவனம் 300 மெட்ரிக் தொன் எரிபொருளையே விநியோகிக்கின்றது. ஆனால், குறைந்தது ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோலை விநியோகிக்குமாறு நாங்கள் ஐ.ஓ.சி நிறுவனத்திடம் கோரியுள்ளோம். அதன்படி, ஐ.ஓ.சி நிறுவனத்தின் நிலையங்களுக்கு அதிக பெற்றோலை விநியோகித்து அவர்களின் ஒத்துழைப்புடன் நெருக்கடியை தீர்ப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, எரிபொருளுக்காக ஏற்பட்டுள்ள வரிசைகள் குறித்து நாங்கள் எங்களுடைய கவலையை தெரிவித்துக்கொள்கின்றோம். தேவைக்கு அதிகமான டீசல் விநியோகிப்பதால் டீசல் குறித்து நெருக்கடிகள் ஏற்படாது. ஆனால், ஒரே நாளில் அதனை பெற்றுக்கொள்ள முயற்சிக்காது, உங்களுக்கு கிடைக்கும் தொகையை ஓரிரு நாட்களுக்கு பெற்றுக்கொள்ளும் வகையில் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எனினும், வரையறைக்கு உட்பட்ட வகையில் பெற்றோலை விநியோகிப்பதாலும் 23ஆம் திகதி ஒக்டென் 92 பெற்றோல் கப்பல் ஒன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கில் செயற்படுவதாலும் அத்தியாவசிய தேவைகளைத் தவிர்ந்து தேவையற்ற விதத்தில் எதிர்வரும் மூன்று நாட்களுக்கு பெற்றோலை பெற்றுக்கொள்ளும் நோக்கில் வரிசையில் நிற்க வேண்டாம்.

அரச சேவையிலுள்ள அதிகாரிகள் இரு வாரங்களுக்கு வீட்டிலிருந்து சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, சில வரையறைகளுக்கு அமைய பாடசாலைகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோன்று, அவசர அத்தியாவசிய சேவையிலுள்ள வைத்தியர்கள், சுகாதாரத்துறையினர் மற்றும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

நாங்கள் சந்தைக்கு விநியோகிக்கும் பெற்றோல் போதுமானதாக இல்லை என்றாலும் 23ஆம் திகதி கப்பல் வரும் வரை நாங்கள் வரையறுக்கப்பட்ட வகையிலேயே பெற்றோலை விநியோகிக்க வேண்டியுள்ளது. அதுவரை மக்கள் யாரும் வரிசையில் நிற்க வேண்டாம். 23ஆம் திகதிக்கு பின்னர் நிலைமையை நாங்கள் வழமைக்கு கொண்டுவருவோம்.

சில இடங்களில் பாதுகாப்பு தரப்புடன் மக்கள் முரண்பட்ட சந்தர்ப்பங்களும் இருப்பதால், இனி வரும் நாட்களில் அவ்வாறு நடந்துகொள்ளாது, வீதிகளையும் மறிப்பதோடு, ஊழியர்களுடனும் முரண்பட வேண்டாம் எனவும் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இருக்கும் எரிபொருளை மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து கூடியது 3 மணி நேர மின்வெட்டுக்குள் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றோம். அதேபோன்று, எவ்வாறான எரிபொருள் நெருக்கடி இருந்தாலும் பொது போக்குவரத்துக்கான புகையிரதத்துக்கு நாளொன்றுக்கு தேவையான 150 மெட்ரிக் தொன் எரிபொருளையும் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து நாளொன்றுக்கு 600 மெட்ரிக் தொன் எரிபொருளையும் தொடர்ந்தும் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, பொது போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ்கள் வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்று அங்கு குழப்பத்தையும் நெருக்கடியையும் ஏற்படுத்த வேண்டாம். மாறாக, அருகிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போவில் மாத்திரம் எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தனியார் முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு இலக்கத் தகட்டின் கடைசி இலக்கத்தின் அடிப்படையில் திகதிகளை ஒதுக்கி எரிபொருள் வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அவசர மற்றும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் மருத்துவ குழுக்கள் மற்றும் பொலிஸ் வாகனங்களுக்கு அடுத்த வாரம் முதல் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை, தனியார்துறை ஊழியர்கள் வீட்டில் இருந்தே வேலை செய்யும் முறையை வகுக்க வேண்டும். இயன்றால், தனியார்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை வீட்டிலிருந்து பணிபுரியுமாறு அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுத்து, பயணங்களை முடிந்தவரை மட்டுப்படுத்துமாறும், பொது மக்கள் பொழுதுபோக்கிற்காக பயணிப்பதற்கு இடமளிக்க வேண்டாம்.

தனியார்துறை ஊழியர்களை கடமைகளுக்கு அழைப்பதை கட்டுப்படுத்துமாறும், முடிந்தவரை வீட்டிலிருந்தே சேவைகளை ஒன்லைனில் நடத்த வேண்டும்.

இதேவேளை, தற்போது கூட்டுத்தாபனத்தில் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 12 ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோல் கையிருப்பில் உள்ளது. சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி வரை போதியளவு கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. கச்சா எண்ணெய் ஏற்றிச் வரும் கப்பல்கள் ஜூலை மாதம் வந்தடையும் - என்றார்.

**உஷ்** ***ஆனால், கூட்டமொன்றில் நாமல் வந்து கலந்துகொண்டார் என்றும் அவர் தனது வேலைகளுக்கு எந்த அழுத்தங்களையும் வழங்கவில்லை என்பதால் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லையென்றும் அந்த அரசியல்வாதிகளுக்கு பதிலளித்தாராம் அமைச்சர் காஞ்சன.***

## பஸ்ஸில் செல்ல பணமில்லை;...

குடும்பத்தின் மூத்த மகனான அந்த இளைஞன் குடும்பத்தினை கவனிக்க வேண்டிய பொறுப்பினை முன்னெடுத்து வந்துள்ளார்.

தனது தந்தைக்கு சரியான வருமானம் இல்லை என்பதனால் தனி நபராக அவர் குடும்பத்திற்காக உழைத்தமை தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞன் 25 ரூபா கட்டணத்தில் ரயிலில் பயணம் செய்வதற்காக 2மணித்தியாலங்கள் ரயிலுக்காக காத்திருந்துள்ளார்.

ஏனைய நாட்களில் பணி முடிந்து பஸ்ஸில் வீடு செல்லும் இளைஞனிடம் அன்றைய தினம் போதுமான பணம் இல்லை என தெரியவந்துள்ளது.

பஸ் கட்டணம் அதிகரித்துள்ள நிலையில், 150 ரூபா செலுத்தி பஸ்ஸில் வீட்டிற்கு செல்ல போதுமான பணம் இல்லாமையினால் ரயிலில் செல்வதற்காக மேற்படி இளைஞன் ரயில் நிலையத்திற்கு சென்றுள்ளார். பின்னர் இரண்டு மணித்தியாலங்கள் ரயில் இல்லாமல் ரயிலுக்காக காத்திருந்துள்ளார். நீண்ட நேரத்தின் பின்னர் ரயில் வந்து ஏற முயற்சித்தபோது மக்களின் கூட்ட நெரிசலால் தண்டவாளத்தில் உள்ள சிறிய இடைவெளிக்குள் விழுந்துள்ளார்.

2 மணித்தியாலங்கள் அவரை வெளியே எடுக்க போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தென்னிலங்கையில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## வரிசைகளில் இதுவரை...

இவ்வாறு வரிசைகளில் உயிரிழந்தவர்களுக்கு உடனடியாக இழப்பீடுகளை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வரிசைகளில் இறந்தவர்களுக்கு இழப்பீடு செலுத்தவில்லை என்றால், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கமான ஐக்கிய ஒருங்கிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக அவற்றை கொள்வனவு செய்ய நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருக்கின்றனர்.

கடந்த காலத்தில் இப்படியான வரிசைகளில் காத்திருந்த 12 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், அண்மையில் பாணந்துறை பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் வரிசையில் காத்திருந்த முச்சக்கரவண்டி சாரதி ஒருவர், முச்சக்கரவண்டிக்குள்ளேயே உயிரிழந்தார்.

## ஐ.நா. மனித உரிமைகள்...

ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, கொரியக் குடியரசு, ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகளை சந்தித்தார்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லே உடனான சந்திப்பின்போது, மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அமைப்புடன் இலங்கை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படுவதாக உயர்ஸ்தானிகருக்கு உறுதியளித்தார். காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி இலக்கு பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட உள்ளூர் பொறிமுறைகளினால் நாட்டில் எட்டப்பட்டுள்ள பெறுபேறுகளையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விரிவாக விவரித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக உயர்ஸ்தானிகருக்கு முன்னர் விடுக்கப்பட்ட அழைப்பு இன்னும் அப்படியே இருப்பதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். தற்போதைய அமர்வின் ஆரம்பத்தில் உயர்ஸ்தானிகர் அறிவித்தமைக்கு அமைய, அவரது நிறைவான ஓய்விற்காக வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சென் சூ உடனான இருதரப்பு சந்திப்பின் போது, இலங்கைக்கு பல ஆண்டுகளாக அளித்து வரும் ஆதரவிற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சீனாவுக்கு நன்றி தெரிவித்தார். நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள், குறிப்பாக வெளிநாட்டு இருப்புகள் மற்றும் உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பில் அவற்றின் தாக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய பேராசிரியர் பீரிஸ், கொவிட்-19 ஐ எதிர்த்து போராடுவதற்காக சீனா அனுப்பிய கணிசமான அளவிலான உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் தடுப்பூசிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட நட்புறவுகள் மற்றும் எதிர்காலத்தில் உறவை மேலும் வலுப்படுத்தும் எதிர்பார்ப்பு குறித்தும் குறிப்பிடப்பட்டது.

பேராசிரியர் பீரிஸ் மற்றும் அவுஸ்திரேலியாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் அமண்டா கோரேலி ஆகியோர் அவுஸ்திரேலியாவின் உள்விவகாரங்கள் மற்றும் சைபர் பாதுகாப்பு அமைச்சர் திருமதி கிளாரி ஓ நீலின் இலங்கைக்கான விஜயம் குறித்து கலந்துரையாடினர். உள்நாட்டலுவல்கள் அமைச்சரை சந்திப்பதற்கு ஆவலுடன் காத்திருப்பதை சுட்டிக்காட்டிய பேராசிரியர் பீரிஸ், இலங்கை மனிதாபிமானப் பேரிடராகக் கருதும் சட்டவிரோத இடம்பெயர்வு விவகாரம் தொடர்பாக தொடர்ச்சியான ஆதரவை இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அவுஸ்திரேலியாவிற்கு நல்குவார் என உறுதியளித்தார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் ஜெகன் சப்பகைனைச் சந்தித்த அமைச்சர் பீரிஸ், முன்னுரிமையின் அடிப்படையில் இலங்கைக்கு மருந்துகள் மற்றும் சுகாதார உபகரணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் நிரந்தரக் கண்காணிப்பாளரான தூதுவர் லோட்டே நுட்சனுடனான சந்திப்பில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பொருளாதார இராஜதந்திரம் தொடர்பான பிரச்சினைகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் வலியுறுத்தினார்.

அரபு லீக்கின் ஒருங்கிணைப்பாளரும் ஜோர்தானின் நிரந்தரப் பிரதிநிதியுமான தூதுவர் வாலிட் காலிட் ஒபேதத், கொரியக் குடியரசின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் டேஹோ லீ, நெதர்லாந்தின் தூதரகப் பொறுப்பாளர் நடாலி ஒலிஜ்ஸ்லேகர் மற்றும் ஜேர்மனியின் பிரதி நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் ஹான்ஸ்-பீட்டர் ஜூகல் ஆகியோருடனும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இருதரப்பு சந்திப்புகளில் ஈடுபட்டார்.

## விசுவமடு எரிபொருள்...

இதையடுத்து, பொதுமக்கள் நேற்றுமுன்தினம் கொந்தளிப்பாகினர்.

இதனால் ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்த இராணுவத்தினர் வானத்தை நோக்கி 4 முறை துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

அத்துடன், புதுக்குடியிருப்பு பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமையை கட்டுப்படுத்தினர்.

***இராணுவம் விளக்கம்***

இதேவேளை, விசுவமடுவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம், பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் சீர்குலைக்க சில சந்தேக நபர்களின் திட்டமிட்ட முயற்சி என இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் மூன்று இராணுவ வீரர்கள் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது, போதையில் இருந்ததாக உறுதி செய்யப்பட்ட கும்பல் ஒன்று கண்ணாடி போத்தல்கள் மற்றும் கற்களை வீசத் தொடங்கியதைத் தொடர்ந்து, நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வானை நோக்கிச் சுட வேண்டியிருந்தது.

மேலும், இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இதன் மூலம் அங்கு ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்த முடிந்தது என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக விசுவமடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## குறைந்த அதிகாரத்தை...

சம்பவங்களை தடுத்து சட்டம், ஒழுங்கை பாதுகாக்கும் நோக்கில் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேவையான சந்தர்ப்பங்களில் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தின் உதவியையும் பெற்றுக்கொள்ள அமைச்சு தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும் அமைதியான ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டாம் எனவும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அத்துருகிரிய பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதுடன் அதில் பொலிஸார் காயமடைந்தனர்.

அதேபோல் முல்லைத்தீவிலும் சம்பவமொன்று பதிவாகியுள்ளதால் மேற்படி தீர்மானத்திற்குச் செல்ல முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## புதியவகை அடுப்புகளை...

ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், "நாட்டில் சமையல் எரிவாயு பெற்றுக்கொள்வதில் கடுமையான நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது.

விறகு பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கும் நகர மக்கள் மற்றும் அடுக்குமாடி வீடுகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் புதிய அடுப்பு அறிமுகம் செய்யப்படவுள்ளது.

சிரட்டைக் கரியை பயன்படுத்தக் கூடிய சில புதிய அடுப்பு மாதிரிகள் பரீட்சார்த்த அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதில் தரமான ஓர் அடுப்பினை தெரிவு செய்து வணிக ரீதியில் உற்பத்தி செய்து சந்தையில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இரண்டு வாரங்களில் இந்த புதிய அடுப்பு அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும், இதற்கான சிரட்டைக் கரி உற்பத்தியையும் மேற்கொள்ள உள்ளதாகவும்" அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முதலில் தந்தையின்...

கடந்த 2017ஆம் ஆண்டு தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள அழைத்துவரப்பட்ட இவர் நேற்று தாயின் இறுதிக்கிரியைக்கு அழைத்துவரப்பட்டுள்ளார். இச் சம்பவம் அனைவரின் மனதையும் நெருடலுக்குள்ளாக்கியுள்ளது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் வசித்து வந்த குறித்த அரசியல் கைதியின் தாயாரான விக்னேஸ்வரநாதன் வாகீஸ்வரி (கண்ணாடி அம்மா) கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

கடந்த 1996ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தமிழ் அரசியல் கைதியாக கடந்த 26ஆண்டுகளாக சிறையிலடைக்கப்பட்டிருக்கும் விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன், இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பவத்தின் ஆயுள் தண்டனை கைதியாக உள்ளார். குறித்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது.

கடந்த 2017ஆம் ஆண்டு தந்தையின் இறுதிக்கிரியைக்காக ஒரு மணி நேர விடுவிப்பில் வந்த இவர், நேற்று தாயின் இறுதிக்கிரியைக்காக 26 வருடங்களின் பின்னர் வந்துள்ளமை அனைவரின் மனதையும் நெகிழவைத்துள்ளது.

## எரிபொருள் தகவல்...

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கொண்டுவரப்படும் நேரங்கள் தொடர்பிலான தகவல்களை வழங்கிய அரச இணையத்தளத்தின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

துறைசார் அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைவாக, இணையத்தள செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ICTA நிறுவனம் இணைந்து குறித்த இணையத்தள செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தன.

## அச்சுறுத்தும் சளிக் காய்ச்சல்...

இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரம் 100க்கும் மேற்பட்டோர் இந்த காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு பொது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, கஹதுடுவ மற்றும் கலவான பகுதிகளில் இருந்தும் சில கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளிலிருந்தும் பெரும்பாலான பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு மாநகர எல்லைகள், தெஹிவளை, பிலியந்தலை மற்றும் ஹோமாகம ஆகிய இடங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாகும். மேலும், பேருவளை மற்றும் களுத்துறை ஆகியவை அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலும் நவம்பர் முதல் ஜனவரி வரையிலும் பரவும் இன்ஃப்ளுவன்ஸா ஏ வைரஸால் பருவகால காய்ச்சல் ஏற்படுவதாக மருத்துவ நிபுணர் ஜூட் ஜெயமஹ தெரிவித்தார்.

அதிக காய்ச்சல், இருமல், மூக்கு ஒழுகுதல், மூக்கடைப்பு, தொண்டைப்புண், தலைவலி, தசை வலி, சொறி மற்றும் சோர்வு ஆகியவை இதன் அறிகுறிகளாகும்.

இந்த அறிகுறிகளைக் கொண்ட நோயாளிகள் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் இந்த வைரஸால் அதிகம் பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

அடிப்படை உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்களும் விரைவில் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகலாம்.

கொவிட் தொற்றுநோய் காலத்தில் இன்ஃப்ளுவன்ஸா வைரஸ் பரவவில்லை. கொவிட் தொற்றுநோயின் கடந்த இரண்டு ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட கடுமையான சுகாதார நடவடிக்கைகள் மற்றும் சமூக விலகல் நடைமுறைகள் இதற்குக் காரணம் என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது.

சுகாதாரமான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது, கைகளை கழுவுதல், பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பை தவிர்ப்பது மற்றும் முகக் கவசம் அணிவது ஆகியவை நோயைத் தடுக்க உதவும்.

இந்த நோய் தானே குணமடையக்கூடியது மற்றும் ஒரு ஆரோக்கியமான நபர் இரண்டு அல்லது மூன்று நாட்களில் முழுமையான ஓய்வு எடுத்து, நிறைய திரவங்களை குடிப்பதன் மூலம் அதை சமாளிக்க முடியும். இருப்பினும், அதிக வெப்பநிலை கொண்ட நோயாளிகள் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.

இருப்பினும், சுவாசிப்பதில் சிரமம், ஆஸ்துமா மற்றும் இதய நோய்கள் போன்ற அடிப்படை சுவாசப் பிரச்சினைகள் உள்ள நோயாளிகளுக்கு இது அதிகரிக்கலாம். இது நிமோனியாவாக மாறலாம்.

இதேவேளை, டெங்கு காய்ச்சலும் பரவி வருவதால், நோயாளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது நாட்டில் டெங்கும் பெருமளவில் பரவி வருகிறது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு வெளியிட்ட வாராந்திர புள்ளி விவரங்களின்படி, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த வாரத்தில் 1,302 பேர் பாதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு 27,454 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் வீடுகளில் வழக்கமான ஆய்வுகள், பிளாஸ்டிக் கொள்கலன்கள் சேகரிப்பு மற்றும் தேவைப்படும்போது புகைபிடித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் அதேவேளையில், மக்கள் தங்கள் வளாகத்தை நுளம்பு உற்பத்தி செய்யும் பகுதிகள் இல்லாமல் வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## எரிபொருளுக்கு பதிலாக...

கனகாம்பிகை குளத்தில் 12ஆயிரம் ரூபா பணத்திற்கு டீசல் வாங்கிய நபருக்கு டீசலுக்கு பதிலாக தண்ணீர் கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பாரதிபுரத்தில் 35ஆயிரம் ரூபாவுக்கு டீசல் வாங்கிய நபருக்கும் டீசலுக்குப் பதிலாக தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும், மலையாளபுரம் பகுதியில் 30 ஆயிரம் ரூபாவுக்கு டீசல் வாங்குவதற்கு பணம் கொடுத்த நிலையில் பணத்துடன் திருடர்கள் தப்பியோடியிருக்கின்றனர்.

இவ்வாறு தினசரி கள்ளச் சந்தையில் எரிபொருள் வாங்க முயற்சித்து நாளாந்தம் பொதுமக்கள் ஏமாற்றப்பட்டுவரும் நிலையில் இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சர்வதேச நாணய...

திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மே 9ஆம் திகதி முதல் மே 24ஆம் திகதி வரையிலான முந்தைய மெய்நிகர் கலந்துரையாடலின்போது ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் ஏற்பாட்டின் மூலம் ஆதரிக்கப்படக்கூடிய பொருளாதார வேலைத்திட்டம் பற்றிய விவாதங்களைத் தொடரும் என்று இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் குழு தெரிவித்துள்ளது.

# ஐந்து துப்பாக்கிகளுடன் வத்தளையில் ஒருவர் கைது

வத்தளை-மாபோல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில், 5 துப்பாக்கிகளுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வீட்டில் துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தமக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்றுமுன்தினம் இந்த சோதனையை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், வத்தளை – மாபோல பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதான ஒருவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சொகுசு பஸ் - கார் மோதி மாரவிலவில் கோர விபத்து

## வைத்தியர் உள்ளிட்ட 09 பேர் காயம்



(ஜூட் சமந்த)

சிலாபம் - கொழும்பு பிரதான வீதி, மாரவிலவில் பஸ் ஒன்றுடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் வைத்தியர் ஒருவர் உட்பட 09 பேர் காயமடைந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் (18) இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த சொகுசு பஸ்ஸொன்றும் மாரவிலவிலிருந்து கொழும்புக்கு பயணித்த காரொன்றுமே நேருக்குநேர் மோதியுள்ளன.

காரில் பயணம்செய்த வைத்தியரும் பஸ்ஸின் சாரதி உட்பட பயணிகளுமே காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பொதுமக்களின் உதவியுடன் மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும், கடும் காயங்களுக்குள்ளான வைத்தியரும் பஸ்ஸின் சாரதியும் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரை செலுத்திச்சென்ற வைத்தியரின் கவனயீனமே விபத்துக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நான்கு நாட்கள் எரிபொருள் இல்லை

# ஏ9 வீதியில் பவுசரை மறித்து வவுனியாவில் மக்கள் போராட்டம்






(வவுனியா செய்தியாளர்)

ஏ9 வீதியில் பயணித்த எரிபொருள் பவுசர் ஒன்றினை முற்றுகையிட்டு வவுனியாவில் மக்கள் போராட்டம் மேற்கொண்டதையடுத்து நிலைமையை கட்டுப்படுத்த நேற்று இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர்.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 4 நாட்களாக மக்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்தும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருள் கிடைக்கவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஏ9 வீதியில் பயணித்த எரிபொருள் பவுசர் ஒன்றினை முற்றுகையிட்டு வீதியை வழிமறித்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஏ9 ஊடான வீதிப் போக்குவரத்துகள் பாதிப்படைந்தன. சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதியை விட்டு விலகிச் செல்லவில்லை.

இதனையடுத்து அங்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டதுடன், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் இராணுவ அதிகாரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடனும், எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடனும் பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக அத்தியாவசிய தேவைக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெற்றோலில் 500 லீற்றரை வரிசையில் நிற்பவர்களுக்கு ஒருவருக்கு 500 ரூபா வீதம் வழங்குவதாகவும், விரைவில் பெற்றோல் வரும் எனவும் இராணுவ அதிகாரி மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரால் வழக்கப்பட்ட உறுதி மொழியை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் எரிபொருள் பவுசரை விடுவித்ததுடன், வீதியை விட்டு விலகிச் சென்றனர்.

இதனையடுத்து, இராணுவப் பாதுகாப்புடன் எரிபொருள் பவுசர் அங்கிருந்து சென்றதுடன், இராணுவத்தினரின் பாதுகாப்புக்கு மத்தியில் 500 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

# கொடுப்பனவுகள் இன்றி பணியாற்ற யாழ். மாநகர உறுப்பினர்கள் தீர்மானம்

(யாழ். செய்தியாளர்)

யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் எவ்வித கொடுப்பனவும் இல்லாமல் பணியாற்றுவது தொடர்பில் எடுத்துக்காட்டும் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர சபையில் கடந்தவாரம் அமர்விலேயே இந்த விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, நாட்டில் காணப்படும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு வழங்காததால் சபையை கலைக்கப்படுகின்ற சூழல் ஏற்படுமானால், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் எவ்வித கொடுப்பனவுமில்லாமல் பணியாற்றுவது என எடுத்துக்காட்டும் வகையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் கொண்டுவரப்பட்ட இந்த பிரேரணைக்கு இரண்டு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தபோதும் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதற்றம்




(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு சந்தை கட்டடத் தொகுதியுடன் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு நேற்றைய தினம் பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதனையடுத்து, நேற்று அதிகாலை முதல் பெற்றோலுக்காக சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்திற்கும் அதிகமான நீண்ட வரிசையில் மக்கள் வாகனங்களுடன் காத்திருந்தனர்.

இந்நிலையில், காலை 10.45 மணியளவிலேயே எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பெற்றோல் பவுசர் வந்திருந்தது. அதனை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்களுக்கு வழங்குமாறு தமக்கு அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றுள்ளதாக எரிபொருள் நிரப்பு ஊழியர்கள் கூறியதையடுத்து பல மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்தவர்கள் குழப்பம் அடைந்தனர்.

அதனையடுத்து, மேலதிகமாக பொலிஸார், இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது.

அதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்று வருகின்றநிலையில், பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்கள் எரிபொருளை பெற்றுத்தரக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது யாழ்.மாவட்ட செயலர், கல்வியங்காட்டில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதியம் இரண்டு மணிக்கு பின்னர் பிரத்தியேகமாக எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்ததை அடுத்து, மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

# தாய், மகள் உள்ளிட்ட மூவர் விபத்தில் காயம்

## யாழ். பருத்தித்துறை வீதியில் சம்பவம்

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் தாய் மற்றும் மகள் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார்சைக்கிளில் சென்ற தாயும் மகளும் துவிச்சக்கரவண்டியில் சென்ற முதியவர் மீது மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் பருத்தித்துறை வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 64வயதான தாய் மற்றும் துவிச்சக்கரவண்டியில் பயணித்த வரணியைச் சேர்ந்த 72வயதான முதியவர் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மோட்டார்சைக்கிளைச் செலுத்திச் சென்ற 24வயதான மகள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# அவுஸ்திரேலியாவிலிருந்து 21பேர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்

## மேலும் ஒருதொகையினர் இன்று வரவுள்ளதாக தகவல்

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற 21 பேர் மீண்டும் நாட்டுக்கு நேற்று (19) அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். விசேட விமானம் மூலம் அவர்கள் அழைத்து வரப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடல் பயணம் ஊடாக படகில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட அவர்கள் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

நீர்கொழும்பு, முல்லைத்தீவு, சிலாபம், உடப்புவ, தொடுவாக, மாரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட மேலும் ஒரு தொகையினர் கிறிஸ்மஸ் தீவிலிருந்து இன்றைய தினம் (20) இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது.

# இலங்கை - இந்திய கப்பல் சேவையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கோரிக்கை

(யாழ். செய்தியாளர்)

இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு போக்குவரத்து சேவையையும் தூத்துக்குடி மற்றும் காங்கேசன்துறை இடையேயும் வர்த்தக சரக்கு கப்பல் சேவையையும் மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

மைத்ரி -ரணில் நல்லாட்சி அரசாங்க காலத்தில் யாழ்ப்பாணத்துக்கான சர்வதேச விமான நிலையம் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டு விமான போக்குவரத்து சேவைகள் சுமுகமாக நடைபெற்று வந்த சூழ்நிலையில், கொரோனாவை காரணம் காட்டியும் அரசியல் காரணங்களாலும் அது இடைநிறுத்தப்பட்டது.

தற்போது மீண்டும் இதனூடாக போக்குவரத்தை தொடங்குவது என்பது வரவேற்கக்கூடிய விடயம். அத்துடன், 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் இராமேஸ்வரம் தலைமன்னாரிடையே படகு போக்குவரத்து சேவை இடம்பெற்றதுடன் தூத்துக்குடி மற்றும் காங்கேசன்துறை இடையே சரக்கு கப்பல் போக்குவரத்து சேவையும் இடம்பெற்றது.

ஆகவே, இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையேயும் படகு போக்குவரத்து சேவையையும் தூத்துக்குடி மற்றும் காங்கேசன்துறை இடையேயும் வர்த்தக சரக்கு கப்பல் சேவையை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை ஆரம்பித்தால் தான் தற்போது நாட்டின் பொருளாதாரம் உயர்வடைவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. வெறுமனே வந்த விமான போக்குவரத்து அமைச்சர் புதிதாக தானே இந்த விமான சேவையை ஆரம்பிப்பதுபோல சித்தரிக்கக்கூடாது என்றார்.




மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கு மக்கள் 2019ஆம் ஆண்டு தேர்தலில் தற்போதைய அரசாங்கத்தை நிராகரித்து விட்டார்கள். ஆனால் தற்போது தென்னிலங்கை மக்கள் ராஜபக்ஷ குடும்ப அரசாங்கத்தை நிராகரித்தபோதும் இரத்தக் களரி நிலை ஏற்பட்டபோதும் அரசாங்கம் தனது பதவியை விட்டு விலகாமல் உள்ளது. ஆகவே அரசாங்கம் மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டும் என்றார்.

# துளிச் செய்திகள்

இலக்கத் தகடை துணியொன்றினால் மறைத்துக்கொண்டு காரில் வந்த குழுவினர் இளைஞர் ஒருவரை கடத்திச்சென்ற சம்பவமொன்று தொடங்கொட பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

★★★★★

நாடளாவிய ரீதியில் மே மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இரண்டாயிரத்து 858 பேர் நேற்றுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 103 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

★★★★★

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புகளில் 54 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

★★★★★

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிவுல்லார பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து சுமார் 40ஆயிரம் பெறுமதியான பொருட்கள் நேற்றுமுன்தினம் (18) கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

புத்தள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெல்வத்த கிராமத்தில் வீடொன்றை உடைத்து குளிர்சாதனப்பெட்டி உள்ளிட்ட மின்னுபகரணங்கள் பல நேற்றுமுன்தினம் (18) கொள்ளையிடப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் புத்தள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ. ஜே. பண்டார தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

★★★★★

வெல்லவாய, யாலபோவ பகுதியில் துவிச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் 19 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

★★★★★

சியம்பலாண்டுவ, முத்துகண்டிய ஆற்றில் நீராடிய 22 வயதுடைய இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமை காரணமாக கல்வித்துறை பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது. எரிபொருள், எரிவாயுவுக்கு நிலவும் பாரிய தட்டுப்பாடு மற்றும் உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பினால் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

குழந்தைகளின் மந்தபோசணை நிலைமை வெகுவாக அதிகரித்து வருவதாக கொழும்பு, ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சிறுவர்கள் ஐவரில் ஒருவர் போசணை குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்றுப்பரவல் காலம்முதல் தற்போதுவரை கல்வித்துறை பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் பாடசாலைகள் இடம்பெறாத காரணத்தினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கையானது ஓரிரு வருடங்களுக்கு பின்னடைவை சந்தித்துள்ளது.

அத்துடன், சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக சுமார் 50 நாட்களுக்கும் மேல் கல்வி நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாடு எதிர்நோக்கியுள்ள சவால்மிக்க காலத்துக்கு மாணவர் சமுதாயம் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளை நடத்துவது குறித்து அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. அதனால்தான் கல்வி அமைச்சின் அறிக்கைகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு விதமாக அமைந்துள்ளன.

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இரு வாரங்களுக்கு பாடசாலைகள் அனைத்தையும் மூடுவது தொடர்பில் ஆராய்வதாக கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

கொழும்பிலுள்ள பாடசாலைகளை மாத்திரம் மூடுவது தொடர்பில் கலந்தாலோசனை நடத்துவதாக அதன் பின்னர் அறிவிக்கப்பட்டது. ஆயினும், மேல் மாகாணத்தின் அனைத்து நகர்ப்புற பாடசாலைகளை மூடுவதெனவும் ஏனைய பகுதி நகர்ப்புற பாடசாலைகளை மூடுவது தொடர்பில் கல்வி அதிகாரிகள் தீர்மானிப்பார்கள் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 20ஆம் திகதி, திங்கட்கிழமை

# கல்வித்துறை பாதிக்கப்படலாமா?

இவ்வாறு அறிக்கைகள் மாறி மாறி வரும்பட்சத்தில் அவை, அரசாங்கத்திடம் கல்வித்துறை தொடர்பில் முறையான கொள்கை இல்லையென்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

இதேவேளை, அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) அதன் தலைவர் திஸ்ஸ விதாரண எம்.பி. தலைமையில் அண்மையில் கூடியது. அதன்போது கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரத்னசிங்கவால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அதிர்ச்சியை ஏற்படுத்திய அதேவேளை கல்வித்துறை எதிர்நோக்கியுள்ள பாரதூரத்தையும் வெளிப்படுத்தியிருந்தது.

ஒட்டுமொத்த கல்வித்துறையும் தீவிரமான, சிக்கலான செயன்முறையைக் கடக்க வேண்டியுள்ளது என்றும் பொருளாதார நெருக்கடியினால் தோன்றியுள்ள சவாலான நிலைமையை முகாமைத்துவம் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்திருந்தார்.

"குறிப்பிடப்பட்ட காலத்தில் பாடசாலைகளை நடத்த முடியாமற்போனமையினால் வரையறுக்கப்பட்ட கால அவகாசத்தில் பாடத்திட்டத்தை பூர்த்திசெய்ய முடியாமை, எரிபொருள் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடுகள், குடும்பங்களில் காணப்படும் பொருளாதாரச் சுமை, பெற்றோர் தமது தொழில்வாய்ப்பை இழக்கும் நிலை போன்றன மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கிராமங்களில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. இணையவழியினூடாக மாணவர்களுக்கு கற்பிக்கும் செயற்பாடானது அவர்களுக்கு வெற்றிகரமான முறையாக இருக்காது" என அவர் தெரிவித்தார். இதேவேளை, 2020ஆம் ஆண்டில் மாணவர்களின் கற்றல் இழப்பு 54வீதமாகக் காணப்பட்ட அதேவேளை, 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் அது 88வீதமாக காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆக, கல்வித்துறை எந்தளவு சவாலை எதிர்நோக்கியிருக்கிறது என்பதையும் இதைச் சமாளிப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லையென்பதும் இங்கே புலப்படுகிறது.

நாட்டின் எதிர்காலம் கல்வித்துறையிலேயே தங்கியிருக்கிறது. கல்வித்துறை பாதிக்கப்படுமானால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதை அரச தரப்புக்கு சொல்லிப் புரியவைக்க வேண்டிய அவசியமும் இல்லை.

# டிஜிட்டல் யுகத்திலிருந்து கற்காலத்திற்கு நகரும் இலங்கை

எம்.எஸ்.அமீர் ஹுசைன்

நாட்டில் இன்னும் சில வாரங்களில் அல்லது ஒரு சில மாதங்களில் பாரிய உணவுப் பஞ்சம் ஒன்று ஏற்பட இருக்கின்றது. அதனால் அந்த பஞ்சத்தில் இருந்து பட்டினி சாவை தவிர்ப்பதற்காக மக்கள் இப்போதே தயாராக வேண்டும் என்று அரசாங்கம் மக்களை எச்சரித்திருக்கின்றது. அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட சந்திப்பொன்றில் கூட அவசரமாக அரச காணிகளை பயிரிடல் மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு பகிர்ந்துகொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டார். அத்துடன் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இன்னும் சில வாரங்களில் நாட்டில் பாரிய நெருக்கடி ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் இவ்வாறு மக்களை அச்சமூட்டி எச்சரிக்கை விடுத்தாலும் இல்லாவிட்டாலும் நாட்டில் தற்போது மிக மோசமான பஞ்சம் ஏற்பட்டு உணவுப் பற்றாக்குறை நிலவி வருவதை கண்கூடாக மக்கள் உணர்கின்றனர். பாடசாலை செல்லும் குழந்தைகளில் சுமார் 20சதவீதத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் காலை உணவை உண்ணாமல் அல்லது இரவும் பட்டினியில் இருந்து காலையும் பட்டினியோடு பாடசாலைகளுக்கு வருவதாக கல்வி ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. பாடசாலைகளில் தினமும் காலை நேரத்தில் மயங்கி விழும் மாணவர்களது எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளன. அத்துடன், போஷாக்கின்மை காரணமாக மந்தபோசனமும் அதிகரித்திருப்பதாக சுகாதார திணைக்களம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

அன்றாட கூலித்தொழில் செய்துவந்த மக்களில் அதிகமானவர்களுக்கு வேலை அல்லது தொழில் இல்லை. விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. முச்சக்கரவண்டி ஓட்டி உழைப்பவர்களால் அந்த தொழிலை செய்யமுடியவில்லை. வாடகைக்கு வாகனம் ஓட்டும் தொழில் செய்யும் சாரதிகளால் அந்த தொழிலை செய்யமுடியாத அளவிற்கு நாட்டில் டீசல், பெற்றோல் பற்றாக்குறை நிலவுகின்றது. சிறிய ஹோட்டல்களை நடத்தும் அன்றாட வருமானத்தை எதிர்பார்த்த மக்களால் ஹோட்டல் நடத்த முடியாமல் அவற்றுக்கு மூடுவிழா. காரணம், எரிவாயு (கேஸ்) இல்லை. இப்படியாக ஒவ்வொரு தொழிலை செய்யக்கூடியவர்களாலும் அந்த தொழிலை செய்யமுடியாத அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டு அன்றாட வருமானத்தை இழந்து வருகின்றனர். கட்டட நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்களால் அந்த தொழிலை செய்ய முடியவில்லை. கட்டிட நிர்மாணப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக அந்த துறை பாதிக்கப் பட்டிருக்கின்றது. அதேநேரம் வறுமைக்கோட்டுக்கு கீழ் மட்ட நிலையில் வாழும் குடும்பங்கள் என்று சுமார் 35 இலட்சம் குடும்பங்கள் அழிவில் உள்ளன.





இந்த குடும்பங்கள் பெரும்பாலான நேரங்களை பட்டினியால் கடத்தி வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

நிலைமை இவ்வாறிருக்க, எதிர்வரும் மாதங்கள் இதைவிட மோசமானதாக அமையலாம் என்று கருதும் அரசாங்கம், அதற்கான தீர்வை தேடமுடியாது என்பது உறுதியாகி விட்டதால் நாட்டை அழித்து சீரழித்து அனைத்தையும் முடித்த பின்னர் இப்போது பிரச்சினையை மக்களது தலையில் போட்டு விவசாயம் செய்யுமாறும் பயிர் நட்டு வீட்டுத் தோட்டச் செய்கை மூலம் உப உணவுகளை உற்பத்தி செய்து கொள்ளுமாறு பிரதேச செயலக மட்டங்களில் இருந்து மக்களை ஊக்குவித்து வருகின்றது. ஆனாலும் இது எந்தளவிற்கு சாத்தியமாகும் என்பதே மக்களின் முன்னுள்ள கேள்வியாகும்.

மேலும், சர்வதேச கடன் உதவிகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இழக்கப்பட்டுள்ள நிலையில், நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து வருகின்றன. மக்கள் ஜனாதிபதியை வீட்டிற்கு போ என்று அறைகூவல் விடுத்து வருகின்ற நிலையில், ஜனாதிபதியோ எப்படியோ பிரதான இரண்டு கட்சிகளான ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட ஆளுங்கட்சியின் மஹிந்த சார்பான அணியில் இருந்தும் உறுப்பினர்களை கவர்ந்திழுத்து அமைச்சர் பதவிகளை கொடுத்து ஆட்சியை மேலும் பலப்படுத்தி வருகின்றது. அப்படியானால், மேலும் சில மாதங்களுக்கு அல்லாமல் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து பதவிக்காலம் பூர்த்தியடையும் 2025ஆம் ஆண்டு வரையில் மக்கள் இந்த பொருளாதார நெருக்கடிக்கும் உணவு பஞ்சத்திற்கும் முகங்கொடுக்க இருக்கின்றது என்பது மட்டும் உறுதியாக தெரிகின்றது.

பயிரிடுமாறு மக்களுக்கு வலியுறுத்தினாலும் மக்கள் பலவிதமான சவால்களை எதிர்நோக்குகின் றனர். 1977ஆம் ஆண்டு அப்போதைய ஐ.தே.கட்சி அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்தது. அதன்மூலம் மக்கள் மரபு வழியான விவசாயத்தை படிப்படியாக கைவிட்டு உற்பத்தி, கைத்தொழில் துறைகளில் நாட்டம் காட்டலாயினர். இளைஞர்கள் விவசாயத்தை கைவிட்டு விட்டு கிராமத்தில் இருந்து நகர்ப்புறங்களில் தொழில்களை தேட ஆரம்பித்தனர். காலப்போக்கில் தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்ததால் மேலும் ஒருபடி முன்னே சென்று டிஜிட்டல் யுகத்திற்குள் பிரவேசித்தனர். அதன் பிரதிபலனாக நாட்டை கொரோனா வைரஸ் தொற்று ஆட்டிப்படைத்த இரண்டு வருடங்களாக வீட்டில் இருந்து இரத்திரனியல் மற்றும் மின்வழி தொழில்களுக்கு பழக்கப்பட்டுவிட்டனர்.

அப்படிப்பட்ட ஒரு நிலையிலிருந்து மீண்டும் மக்களை விவசாய மற்றும் பயிரிடல் யுகத்திற்குள் பிரவேசிக்குமாறு அரசாங்கம் அழைத்தால் எவ்வாறு அதற்குள் பிரவேசிப்பது என்பது பாரிய பிரச்சினையாகும். கிராமப்புறங்களில் இலட்சக் கணக்கான ஏக்கர் காணி நிலங்கள், வயல் நிலங்கள் 30 வருடங்களுக்கு மேலாக பயிர்ச்செய்கை பன்னாமல் தரிசு நிலங்களாக மாறியுள்ளன. அரச காணிகள் கூட பிரமாண்டமான வனாந்தரங்களாக மாறியுள்ளன. கட்டட நிர்மாண வேகம் அதிகரித்ததால் காணிகள் அற்றுப்போனதால் நகர்ப் புறங்களில் நிலப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், சுற்றாடலில் பயிரிடல் அல்லது விவசாயம் என்று முயற்சியில் ஈடுபடும் போது சுற்றாடலில் இருந்து வருகின்ற பலவிதமான பிரச்சினைகள் உள்ளன. வடமேல், வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் யானைகளால் பாரிய தொல்லைகள் உள்ளன. ஏனைய பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் காட்டுப் பன்றி, இத்தாயன், நத்தை போன்ற, கட்டாக்காலி மாடுகள் மற்றும் பயிர்களை நாசம் செய்யும் பிராணிகளாலும் மிருகங்களாலும் பலவிதமான பிரச்சினைகள் உள்ளன. தென் மாகாணத்தில் நீர் தட்டுப்பாடு காரணமாக பல்லா யிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விதைகளுக்கான தட்டுப்பாடு காரணமாக விலையேற்றம், உர பற்றாக்குறை, கிருமிநாசினி தட்டுப்பாடு என்று இன்னும் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன.

அத்துடன், மறுபுறமாக ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய ஆளும் வர்க்கத்துடன் நேசமாக இருக்கின்ற தரப்பினருக்கு ஒரு நன்மை கிட்ட இருக்கின்றது. விவசாயத்தின் பெயரில் அரச காணிகளை பெற்றுக்கொண்டால் அவற்றை கையாடலாம் அல்லது பின்னர் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கின்றது. ஆனாலும், நீண்ட காலமான அரச காணிகளில் குடியிருந்து வரும் மக்களுக்கு அவற்றுக்கான காணி உறுதிகளை கோரி வந்தாலும் அதனை அரசாங்கம் பல வருடங்களாகியும் கையளிக்காமல் இருந்து வருகின்ற நிலையில் இந்த சூழ்நிலையிலாவது அவற்றை பிரதேச செயலக மட்டங்களில் இருந்து தகவல்களை பெற்று விரைவில் காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும், நாகரீகம் என்பது படிப்படியாக மானிட வர்க்கமும் தேசங்களும் முன்னேற்றம், அபிவிருத்தியை நாடி நகர்வதாகும். நாடோடியாக மிருகங்களை வேட்டையாடி குகைகளுக்குள் வாழ்ந்த கற்கால மனிதன் விவசாய யுகத்தில் பிரவேசித்து ஒருபடி முன்னேறினான். பின்னர் விவசாயத்தில் இருந்து தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக கைத்தொழில் துறைக்குள் பிரவேசித்து படிப்படியாக நாகரீகமடைந்தான். ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில், எமது நாட்டின் நிலையோ கற்காலத்தில் இருந்து நவீன காலத்தை நோக்கி நகர்ந்த நிலையில் இருந்து மீண்டும் பின்நோக்கி நகர்ந்து கற்காலத்திற்கே செல்வதாக இருக்கின்றது. அந்தளவிற்கு நாட்டில் பொருளாதார நெருக்கடி மக்களை வாட்டி வதைக்க ஆரம்பித்திருக்கின்றது.

எவ்வாறாயினும், சோஷலிசத்தை நம்பி காலடி வைத்த எந்தவொரு நாடும் முன்னேற்றம், அபிவிருத்தி அடைந்ததாக இல்லை. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் சோவியத் ரஷ்யா வீழ்ச்சி கண்டதோடு, சோஷலிச சமூக உடைமைவாதம் உலகில் முற்றாக வீழ்ச்சி கண்டது. ஏதோ ஒருவகையில் ஒருசில நாடுகள் அவை கடைபிடித்து வந்த கடுமையான பொருளாதார கொள்கைகள் காரணமாக சுயமாக அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. கொரியா, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகள் அதற்கு சிறந்த உதாரணங்களாகும். அவ்வாறான தோல்வி கண்ட கொள்கையின் பின்னால் சென்றதன் விளைவு தான் இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ள இந்த அவல நிலை. 1970 முதல் 1977 வரையான அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கால ஆட்சியும் இதேபோன்ற பஞ்சத்தையும் பொருளாதார நெருக்கடியையும் சந்தித்ததை நாம் மறந்துவிட முடியாது.

இன்று ஏற்பட்டுள்ள இந்த நிலை ஏற்பட பிரதான காரணம் 2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் பதவியிலிருந்த அரசாங்கமும் ஆட்சியாளர்களும் அதன் பின்னர் 2019ஆம் ஆண்டு பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் ஆகும். இதற்கிடையில் 2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலும் மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஆட்சி காலத்திலும் முன்னைய ஆட்சியின் தொடராக ஒரு தெளிவான பொருளாதாரக் கொள்கை திட்டமிடல் இருக்கவில்லை. அந்த ஆட்சியில் ஐ.தே. கட்சிக்கும் ஸ்ரீல.சு.கட்சிக்கும் இடையிலான உட்பூசலும் முரண்பாடுகளுமே வலுவடைந்து கொண்டிருந்ததால் பலவீனமான ஒரு ஆட்சி காணப்பட்டது. இன்று நாடு முகங்கொடுத்துள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கும் இந்த ஆட்சியாளர்கள் பொறுப்பாக வேண்டும்.

எவ்வாறாக இருந்தாலும் நாட்டில் விவசாய புரட்சியை ஏற்படுத்த அரசாங்கம் மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும் அதற்கும் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கான எந்தவிதமான திட்டங்களும் இல்லை. "வருமானத்தை அதிகரிப்போம், செலவை குறைப்போம். அரச தனியார் துறையினருடன் இணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப்பொருளில் புதிய பொருளாதார மீட்சி திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த திட்டம் பிரதேச செயலக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் இதன் அங்குரார்ப்பண நிகழ்வொன்று மாவனல்லை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதனை மாவனல்லை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்தது. மக்கள் மரக்கறி வகைகள், மரவள்ளி, உப உணவுப் பயிர்கள் உட்பட பயிரிடல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அரசாங்கம் மூன்று மாத காலத்திற்கு அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமை நாட்களில் விடுமுறை வழங்கப்பட்டிருப்பதும் இதன் ஓர் அங்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இங்கு மாவனல்லை பிரதேச செயலாளர் சுஜானி ரத்னசேகர உட்பட பல அதிகாரிகள் உரையாற்றினர்.

மீண்டும் விவசாயம் செய்யுங்கள், வீட்டுத் தோட்டம் செய்து உணவுத் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினாலும் அதன் பின்னால் இருக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தால் எந்தவிதமான தீர்வையும் முன்வைக்க முடியாதிருக்கின்றது. ஏற்கனவே விவசாயத்தை நம்பி வாழ்ந்த மக்களை வீதிக்கு இறக்கிய அரசாங்கம் அவர்களது விவசாயத்திற்கு தேவையான உரத்தை பெற்றுக்கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றது. இப்படியான ஒரு சூழ்நிலையில் பொருளாதார அபிவிருத்தியா விவசாயமா என்ற இரண்டும் கெட்டான் நிலைக்கு தள்ளிவிட்டு தீர்வு தெரியாமல் திண்டாடும் ஜனாதிபதியும் அமைச்சரவையும் நாட்டை நெருக்கடியில் இருந்து எப்படி மீட்கப்போகின்றது என்பதே இன்றைய பிரதான கேள்வியாகும்.

## நக்கல் நமசிவாயம்

எரிபொருள் வரிசைகளில நிக்கிற ஆட்களுக்கு வடையும் பிளேன்ரீயும் விக்கலாமெண்டு பார்த்தா ,பருப்பு விலையையும் கூட்டிப்போட்டாங்கள்...



## இன்றைய நாளில்...

- 1837 – விக்டோரியா பிரித்தானியாவின் பேரரசி ஆனார்.
- 1840 – சாமுவெல் மோர்ஸ் தந்திக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1944 – சோதனை ஏவுகணை எம்.டபிள்யூ 18014 வி-2 176 கி.மீ. உயரத்தை அடைந்து வெளியுலகிற்குச் சென்ற முதலாவது மனிதனால் செய்யப்பட்ட பொருள் என்ற சாதனை படைத்தது.
- 1960 – மாலி கூட்டமைப்பு பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது. இது பின்னர் மாலி, செனிகல் என இரண்டாகப் பிரிந்தது.
- 1990 – கல்முனை படுகொலைகள்: இலங்கையின் கிழக்கு மாகாணத் தில் கல்முனையில் இலங்கை படைத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 250 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 – 5261 யுரேக்கா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1990 – ஈரானின் வடக்கே 7.4 Mw நிலநடுக்கம் ஏற்பட்டதில் 35,000–50,000 வரையானோர் உயிரிழந்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை ஸ்ரீ வீர மா காளியம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று (19) காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 12ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 13ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.







# யாழில் ஜீ.எல்.பீரிஸின் உருவபொம்மை எரித்து போராட்டம்









**(யாழ். நிருபர்)**

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் உருவபொம்மையை யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் கள அலுவலகத்திற்கு முன்னால் எரித்து நேற்று (19) ஞாயிற்றுக்கிழமை போராட்டம் இடம்பெற்றது.

அரசாங்கம் தவறான கருத்துகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்துள்ளதாக கூறி அதற்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் பேரணியாக ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு வந்தடைந்தனர்.

இதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ள கருத்துகளை கண்டித்து அதற்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், அமைச்சரின் உருவபொம்மையை தீயிட்டுக் கொளுத்தினர். போராட்டத்தின் நிறைவில், போராட்டக்காரர்கள் ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

போராட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவுகள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# கோட்டா கோ கமவிலிருந்து யாழ். நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு





**(யாழ். நிருபர்)**

'கோட்டா கோ கம' நூலகத்திலிருந்து யாழ். பொது நூலகத்திற்கு நேற்று முன்தினம் (18) நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

யாழ். பொது நூலகத்துக்கு மதியம் ஒரு மணியளவில் வந்த கோட்டா கோ கம போராட்டக் குழுவினர் ஒரு தொகுதி நூல்களை யாழ்ப்பாண பொது நூலக நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

அத்துடன் யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டமையை நினைவுகூரும் வகையில் நூலக வாயிலில் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவுகூரலில் ஈடுபட்டனர்.

கோட்டா கோ கம போராட்டக்குழுவினர் யாழ். பொது நூலகத்திற்கும் மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்திற்கும் கிளிநொச்சியில் இருக்கின்ற மாணவர்களுக்கும் நூல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டாபய பதவி விலகும்வரை எமது போராட்டம் ஓயாது

## 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள் யாழில் தெரிவிப்பு




**(யாழ். நிருபர்)**

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினையும் வாழ்வாதாரத்துக்கான தேவை கருதிய போராட்டங்களும் இடம்பெற்று வருவதால் 'கோட்டா கோ கம' போராட்டம் தொய்வடைந்து காணப்படுகிறது. ஆனாலும் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும்வரை எமது போராட்டம் ஓயாது - என கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கோட்டா கோ கம நூலகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நூல்களை கொண்டு வந்திருக்கின்றோம்.

நாட்டை ஆட்சிசெய்த மோசமான ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் காரணமாகவும் தவறான வழிநடத்தல் காரணமாகவும் எமது நாட்டிற்கு இந்த நிலைமை ஏற்பட்டது.

தவறான ஆட்சியால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இரண்டு வருடங்களாக பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைமை காணப்படுகிறது. எமது கோட்டா கோ கம நூலகத்திற்கு கிடைத்த நூல்களை நாம் நாடளாவிய ரீதியில் கஷ்டப்படுகின்ற மாணவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்தோம். அந்தவகையில், மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்கு அருகில் உள்ள மிகவும் கஷ்டப்பட்ட ஒரு பகுதியில் நூல்களை வழங்கினோம். இரண்டாவதாக நாம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்பொழுது நாம் பிறக்கவும் இல்லை. எங்கள் கண்முன்னே நாங்கள் அமைத்த போராட்டக்களத்தை நெருப்பில் எரித்தார்கள். அதனை நாம் பார்த்துக்கொண்டிருந்தோம். எமது கோட்டா கோ கம நூலகம் எரிக்கப்படுமோ என அஞ்சியிருந்தோம். நூலகத்தை எரிப்பது என்பது சமூகத்தினை வீழ்த்துவதற்கு முக்கியமானதாகும்.

அந்த வகையில், யாழ். பொது நூலகத்திற்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்திற்கும் கிளிநொச்சியில் இருக்கின்ற மாணவர்களுக்கும் நூல்களை வழங்கவிருக்கிறோம். அத்துடன், காலிமுகத்திடல் கோட்டா கோ கமவில் இணைய வழியிலான பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றோம் - என்றனர்.

# பூநகரியில் இன்று 12 மணித்தியால நீர்வெட்டு

**(கிளிநொச்சி நிருபர்)**

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இன்று திங்கட்கிழமை 12 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் அறிவித்துள்ளனர்.

பூநகரி வாடியடிச் சந்தியில் அமைந்துள்ள நீர்த்தாங்கியில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தம் மற்றும் பராமரிப்பு பணிகள் காரணமாக திங்கட்கிழமை மாலை 6 மணிமுதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை (21) காலை 6 மணிவரை நீர்வெட்டு அமுல்படுத்தப்படும்.

எனவே, பொதுமக்கள் இதனை கருத்திற்கொண்டு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் கேட்டுள்ளனர்.

# கல்வி சமூகத்தினர் எரிபொருள் நெருக்கடியால் பெரும் பாதிப்பு

## ஆசிரியர் சேவா சங்கம் சுட்டிக்காட்டு



**(வவுனியா நிருபர்)**

கல்வி சமூகத்தினர் எரிபொருள் நெருக்கடியால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக ஆசிரியர் சேவா சங்கத்தின் வடமாகாண தலைவர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். தற்போதைய எரிபொருள் நெருக்கடியில் கல்விச் சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

கல்வி சமூகத்துடன் தொடர்புடைய பலரும் எரிபொருள் நெருக்கடியால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய போக்குவரத்து வசதிகளோ அல்லது தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்தக்கூடிய எரிபொருள் வசதிகளோ இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் அவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்காக அவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள் சீராக இடம்பெறாமையினால் அவர்கள் கணிசமாக தமது கல்வியை இழந்தவர்களாக உள்ளபோது தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடியால் அவர்கள் மேலும் துன்பப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், ஆசிரியர்கள் இதற்கும் மேலாக கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர். சரியான திட்டமிடல் இன்மையே இதற்கான காரணமாகும்.

கடந்த சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் போதியளவு கற்றலுடன் பரீட்சைக்கு முகங்கொடுக்கவில்லை.

அத்துடன், தற்போதைய நிலையில் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு முறையான பொதுப் போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. ஆகவே, இதற்கு சரியான உபாயங்களை அரசாங்கம் மேற்கொண்டு முறையான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

# யாழில் புனரமைக்கப்பட்ட பூங்காக்கள், குளங்கள் திறப்பு



**(யாழ். நிருபர்)**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் மூலோபாய நகரங்கள் அபிவிருத்தித் திட்டவரைபில் உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட பூங்காக்கள் மற்றும் புனரமைக்கப்பட்ட குளம் என்பன கடந்த வெள்ளிக்கிழமை (17) திறந்துவைக்கப்பட்டது.

பாசையூர் பூங்கா, இராசாவின் தோட்ட வீதி பூங்கா, மடத்தடி பூங்கா என்பன நிர்மாணிக்கப்பட்டதுடன், சென். ஜோன் பொஸ்கோ அருகிலுள்ள பிள்ளையார் குளமும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாணப் பணிப்பாளர் டி.பி.எஸ்.கே. திசாநாயக்க, யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நாட்டின் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு மிகவும் எளிமையான முறையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

# தங்க நகைகளை அபகரித்த இருவர் கைது

**(யாழ். நிருபர்)**

வீதியில் மோட்டார்சைக்கிளில் பயணித்த தம்பதியிடம் தங்க நகைகளை அபகரித்த இருவர் கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி கல்வியங்காடு - செம்மணி, ஆடியபாதம் வீதியில் வைத்து வவுனியாவைச் சேர்ந்த தம்பதியிடம் தாலிக்கொடி, சங்கிலி என 15 தங்கப் பவுண் நகைகள் வழிப்பறிக் கொள்ளையிடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அன்றைய தினமே கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வவுனியாவிலிருந்து வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற திருமண நிகழ்வுக்கு வருகை தந்து திரும்பியபோதே சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் நாவற்குழியைச் சேர்ந்த 19 மற்றும் 22 வயதுடைய இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிட்ட நகைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

# மன்னார் நொச்சிக்குள இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் சரணடைந்த ஐவருக்கு விளக்கமறியல்

**(மன்னார் நகர் நிருபர்)**

மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் குடும்பஸ்தர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் 5 பேர் கடந்த வெள்ளிக்கிழமை (17) மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த குறித்த 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று முன்தினம் (18) உத்தரவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை 10ஆம் திகதி காலை மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் நிகழ்ந்த வாள்வெட்டு சம்பவத்தில் இரண்டு குடும்பஸ்தர்கள் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களும், காயமடைந்தவர்களும் மன்னார் உயிலங்குளத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களும், உறவினர்களும் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை தொடர்பாக அடையாளம் காணப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வந்தநிலையில் தேடப்பட்டுவந்த சந்தேக நபர்கள் 5 பேர் கடந்த வெள்ளிக்கிழமை (17) இரவு சட்டத்தரணிகள் ஊடாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர். சரணடைந்த குறித்த 5 சந்தேகநபர்களையும் மன்னார் பொலிஸார் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முன்னிலைப்படுத்திய நிலையில் நேற்று முன்தினம் (18) மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபர்கள் 5 பேரையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை குறித்த கொலை சம்பவம் தொடர்பாக 8 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமலாக்கப்பட்டோரின் ஆட்கொணர்வு மனுவுக்கான தீர்ப்பு ஜூலை முதலாம் திகதி

## சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல்



**(வவுனியா நிருபர்)**

இறுதி யுத்தத்தில் சரணடைந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் உட்பட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வழங்கப்படவுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை (17) வவுனியா மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படவிருந்த நிலையில் மீண்டும் திகதி இடப்பட்டதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தத்தின் கடைசிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்டோர் சரணடைந்து வலிந்து காணாமலாக்கப்பட்டமை தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் சம்பந்தமான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட இருந்தபோதிலும், தவிர்க்க முடியாத காரணத்தினால் ஜூலை மாதம் முதலாம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என நீதிமன்றத்தினால் கூறப்பட்டுள்ளது.

ஆகவே ஜூலை மாதம் முதலாம் திகதி நாம் தீர்ப்புக்காக காத்திருக்கின்றோம் - என தெரிவித்தார்.



தமிழக அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களின் ஒரு தொகுதி நுவரெலியா, கொத்மலை பகுதியிலுள்ள 34ஆயிரத்து 12 குடும்பங்களுக்கு கண்டி இந்திய உதவி தூதரகத்தின் உதவித் தூதுவர் டாக்டர்.எஸ்.அதிரா தலைமையில் அண்மையில் வழங்கப்பட்டது. இதன்போது, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, கொத்மலை பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (படங்கள்:- நுவரெலியா நிருபர்)

# கண்டி மாவட்ட பிரதேச செயலகங்களில் உள்ளூர் உற்பத்தி விற்பனைக்கூடம்

(கண்டிநிருபர்)



கண்டி மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் உள்ளூர் உற்பத்தி விற்பனைக்கூடம் ஒன்றை நடத்துமாறு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தின் போதே மாவட்ட செயலாளர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தமது பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் தொழில் முயற்சியாளர்கள், விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு இந்த விற்பனை நிலையத்தைப் பயன்படுத்தலாம்.

மேலும், நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக, காய்கறிகள் உள்ளிட்ட பயிர்களை ஏற்றிச்செல்வதற்கு எரிபொருள் இல்லாததால், அவர்களின் விளைபொருட்கள் தாக்குப்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், நடமாடும் வாகனங்களை இயக்கிவந்த பல வர்த்தக நிறுவனங்கள் முடங்கியுள்ளதாகவும் இவ்வாறான விற்பனை நிலையங்கள் அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான விற்பனை நிலையங்களினூடாக நுகர்வோர் தரப்பு சலுகை விலையில் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய வகையில் இடைத்தரகர்களுக்கான செலவு முற்றாக நிறுத்தப்படும். நாடு எதிர்நோக்கும் சவால்களை முறியடிக்கும் பாரம்பரியக் கட்டமைப்பை முறியடித்து மக்களுக்காக பணியாற்றுவது ஒவ்வொரு அரச உத்தியோகத்தரின் பொறுப்பாகும் எனத் தெரிவித்த மாவட்ட செயலாளர் அதற்கேற்ற வேலைத்திட்டங்களை உருவாக்குமாறும் இதன்போது கேட்டுக்கொண்டார்.

கண்டி மாவட்டத்தில் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலக வளாகத்திலுள்ள இடத்தைப் பயன்படுத்தி இவ்வாறான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் முன்னோடித் திட்டமாக அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமானது எனவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார். இந்நிகழ்வில் மத்திய மாகாண விவசாய செயலாளர் பசன் ரத்நாயக்க, கண்டி மேலதிக மாவட்ட செயலாளர் லலித் எடம்பாவல மற்றும் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## பொகவந்தலாவையில் மரை இறைச்சியுடன் இருவர் கைது



தேயிலைத் தோட்டமொன்றில் சுற்றித் திரிந்த மரையொன்றை கொன்று, இறைச்சியாக்கிய இருவர் பொகவந்தலாவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிட்வெல் தோட்டத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த தோட்டத்தின் தேயிலை மலைகளில் சுற்றித் திரிந்த மரையையே இவர்கள் இவ்வாறு பொறி வைத்து பிடித்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பொகவந்தலாவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் ஒருவரின் வீட்டை சோதனையிட்டபோது, அங்கிருந்து 12 கிலோகிராம் மரை இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# மோட்டார்சைக்கிள் மோதியதில் சிகிச்சை பலனின்றி பெண் பலி



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா, சாமிமலை வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதுண்டு பெண் ஒருவர் பலத்த காயங்களுடன் கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம்(18) இரவு சாமிமலை வீதியில் புரவுன்சீக், ராணி தோட்டப் பிரிவிலுள்ள பெருமாள் ருக்மணி (வயது 58) என்பவர் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த வேளையில் பண்ணின் தோட்டப் பகுதியிலிருந்து மஸ்கெலியா நகருக்கு வந்த மோட்டார் சைக்கிள் மோதுண்டதிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் பெண்ணுக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதுடன் மோட்டார்சைக்கிள் ஓட்டுனரும் பலத்த காயங்களுடன் கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.



கண்டி மாவட்டத்தில் கடந்த பல நாட்களாக வாகனங்களுக்கான எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருக்கும் வாகன சாரதிகளுக்கு நேற்று (19) அயலவர்களால் பாற்சோறு வழங்கப்பட்டது. (படங்கள்:- கண்டி நிருபர்)



ஹட்டன் பிரதேசத்தில் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்துள்ள நிலையில், டீசல் மற்றும் பெற்றோலை பெற்றுக்கொள்வதற்காக நேற்று(19) அதிகளவான வாகனங்கள் வரிசையில் காத்திருந்ததை காணலாம். (படங்கள்:- மனூர சுதத் செல்லஹேவா)

# பெற்றோலுக்காக காத்திருக்கும் சாரதிகளுக்கு கம்பளை பொலிஸாரால் பாற்சோறு வழங்கிவைப்பு



(கம்பளை யோகா)

கம்பளை நகரில் பெற்றோல் பெறுவதற்கு அதிகமான வாகனங்கள் பல நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றன. இரவு, பகல் பாராமல் கடந்த ஒரு வாரமாக பெற்றோல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வாகனங்களுடன் நீண்ட வரிசையில் சாரதிகள் காத்திருக்கின்றனர்.

இதேவேளை, கம்பளை - கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தின் முன் வாகனங்களுடன் காத்திருக்கும் சாரதிகளுக்கு நேற்று(19) காலை கம்பளை பொலிஸார் இணைந்து பாற்சோறு வழங்கினர். இம் மனிதநேய செயலை பலரும் பாராட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## அப்துல் கலாம் ஞாபகார்த்த அறக்கட்டளை அங்குரார்ப்பணம்



(கண்டி நிருபர்)

அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளை, சர்வதேச மனித உரிமைகள் மற்றும் நலன்புரி அமைப்பு என்பவற்றின் ஊவா மாகாண கிளை நேற்று(19) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக ஹப்புத்தளையில் இடம்பெற்ற அங்கத்தவர்கள் ஒன்றுகூடலில் தெரிவுசெய்யப்பட்ட ஊவா மாகாண மத்திய குழு அங்கத்தவர்களுடன் மேற்படி அமைப்பின் இலங்கை கிளைத் தலைவர் என். கருணாகரன் மற்றும் ஊவா மாகாண பணிப்பாளர் டி.ஜோன் நிக்கலஸ் உட்பட ஏனையவர்களையும் காணலாம்.



சப்ரகமுவ மாகாணத்திலுள்ள யுத்தத்தினால் கால்களை இழந்த 12 இராணுவ வீரர்களுக்கு செயற்கை கால்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. (சிவா ஸ்ரீதரராவ்)

# மண்ணெண்ணெய் மறைத்துவைத்துள்ளதாக குற்றம் சுமத்தி ஹட்டனில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(மனூர சுதத் செல்லஹேவா)



ஹட்டன் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் 18ஆம் திகதி இரவு மண்ணெண்ணெயை முறையாக விநியோகிக்காமல் மறைத்துவைத்துள்ளதாக குற்றம் சுமத்தி பொதுமக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடந்த 18ஆம் திகதி மண்ணெண்ணெய் கிடைத்ததால், மண்ணெண்ணெய் பெறுவதற்காக ஏராளமான மக்கள் பல மணிநேரம் வரிசையில் காத்திருந்தனர்.

வரிசையில் நின்றவர்கள் சிலருக்கு மண்ணெண்ணெய் கொடுத்துவிட்டு மேலும் வரிசையில் நின்றிருந்தவர்களுக்கு மண்ணெண்ணெய் முடிந்துவிட்டதாக கூறி மண்ணெண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன்போது ஆத்திரமடைந்த மக்கள், எரிபொருள் நிலைய ஊழியர்கள் மண்ணெண்ணெயை மறைத்துவைத்து இல்லையென கூறுவதாக தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த ஹட்டன் பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நிலைமையை விளக்கி வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தனர்.

# ஹட்டன் டிப்போவிற்கு பயண அட்டை மூலம் 50 இலட்சம் ரூபா வருமானம்

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஹட்டன் பஸ் டிப்போவில் இதுவரை சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பயண அட்டை (Season Ticket) விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் டிப்போ முகாமையாளர் டபிள்யூ.ஜி.கே. கீர்த்தி ரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வழமையாக 16 தொடக்கம் 18 இலட்சம் ரூபா வரையிலேயே பயண அட்டைகள் விநியோகிக்கப்படும். இந்நிலை கடந்த மே மாதம் 32 இலட்சம் ரூபாவிற்கு உயர்வடைந்துள்ள அதேவேளை, ஜூன் மாதமளவில் 50 இலட்சம் ரூபா வரையில் உயர்வடைந்துள்ளது. மாணவர்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் ஊழியர்களே இவ்வாறு பயணச்சீட்டுகளை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



2021ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஹட்டன் கல்வி வலய கோட்டம் மூன்று ஹப்புகஸ்தனை தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்களில் சித்தியடைந்தவர்களுக்கு கௌரவிப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (18) நடைபெற்றன. பாடசாலை அதிபர் ஜோதிவேல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பிரதேச தொண்டு நிறுவனத்தினர் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:-செ.தி.பெருமாள்)

# நாட்டின் உணவு நெருக்கடிக்குத் தீர்வுகாண உணவுப் பாதுகாப்புக் குழுவை அமைக்குக

## அரசாங்க கணக்குகள் பற்றிய குழு பரிந்துரை

- எதிர்காலத்தின் தேவைக்காக இறக்குமதி செய்யப்பட வேண்டிய அரிசியின் தேவை 800,000 மெட்ரிக் தொன்
- சார்க் உணவு வங்கி மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் ஆராய்வு

நாட்டில் நிலவும் உணவுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அனைத்து அமைச்சுகளையும் ஒன்றிணைத்து உணவுப் பாதுகாப்புக்கான அமைச்சரவை உபகுழுவொன்றை அமைக்க வேண்டுமென அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய உணவு நெருக்கடியை சமாளிப்பதற்குப் பொறுப்பான அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து, விரைவான முடிவுகளை எடுப்பதற்கும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்கும் இந்தக் குழுவை அமைப்பது முக்கியம் என குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. உணவு நெருக்கடியை சமாளிப்பதற்கு சார்க் உணவு வங்கி மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் ஆதரவைப் பெறுவது குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் உணவுப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் நீக்கியதன் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் கட்டுப்படியாகாத நிலையில் அதிகரித்துள்ளதாக கோபா குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். சந்தையில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் உயர்ந்த விலையில் இருப்பதால் அரசாங்கத்தின் தலையீட்டில் நியாயமான விலையில் அவற்றை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறும் குழுவின் தலைவர் பரிந்துரைத்தார். இதன்படி, உணவு ஆணையாளர் திணைக்களம், லங்கா சதொச நிறுவனம், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய கூட்டுறவு சங்கங்கள் ஊடாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உணவு





வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

காலநிலை மாற்றம், ரஷ்ய - உக்ரைன் போர், உலக கோதுமை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, சோள உற்பத்தி, உர உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, எண்ணெய் விலை உயர்வு போன்றவற்றால் உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். இந்நிலையில், அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்ட உர நெருக்கடி மற்றும் அந்நிய செலாவணி கையிருப்பு பற்றாக்குறை மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு தொடர்பான கொள்கை சிக்கல்கள் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்துள்ளது. இலங்கை சுங்க மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தரவுகளின்படி, சம்பா அரிசி, நாட்டரிசி, சீனி, சிவப்பு பருப்பு, கோதுமை மா, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, டின் மீன், பால்மா, செத்தல் மிளகாய், கொண்டைக்கடலை, கோழி இறைச்சி, மீன் மற்றும் முட்டை உள்ளிட்ட 16 வகையான உணவுகள் வர்த்தக அமைச்சினால் அத்தியாவசிய உணவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் பெரும்போக மற்றும் சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அளவு மற்றும் நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய தேவையான அளவு குறித்து அதிகாரிகள் குழுவுக்கு விளக்கினர். புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் அமைக்கப்பட்ட விசேட குழு பிரதமர் அலுவலகத்தில் கூடி இது குறித்து ஆராயவிருப்பதாக விவசாய அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் நாட்டின் காபோஹைட்ரேட், புரதம் மற்றும் ஏனைய எரிசக்தி தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது தொடர்பில் விவசாய அமைச்சு முறையான வேலைத்திட்டத்தை வகுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகவலுக்காக மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்படும் என செயலாளர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஞ்சித் பண்டார, திஸ்ஸ அத்தநாயக்க, உதய கம்மன்பில, லசந்த அலகியவன்ன, வைத்தியகலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, கலாநிதி ஹரினி அமரசூரிய, நிரோஷன் பெரேரா ஆகியோரும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# மோசமான வேலைத்திட்டத்தை நிறுத்தி புதிய அரசுக்கு அனுமதி வழங்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை



நாட்டில் 24 மணி நேரமும் வரிசையில் நிற்கும் முச்சக்கரவண்டி சாரதிகளுக்காகவும், வாகனங்களில் சிரமப்படும் மக்களுக்காகவும், பசியால் வரிசையில் வாடும் மக்களுக்காகவும், வரிசையில் நின்று இறந்த அப்பாவி மக்களுக்காகவும், ரயிலில் பயணித்த போது தவறி விழுந்து உயிரிழந்த அப்பாவி இளைஞருக்காகவும் அரசாங்கம் இந்த மோசமான வேலைத்திட்டத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மக்களை வாழ வைக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசாங்கத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

வரிசையில் நின்று அவதிப்படும் மக்களின் வலியையும் வேதனைகளையும் புரிந்து கொள்ளாத ஆட்சியாளர்களின் பயணத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

வீட்டில் பசியால் வாடும் குழந்தைகளுக்கு உணவளிக்க முடியாமல் தவிக்கும் பெற்றோர்கள் சார்பாகவும், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வியை இழந்து எதிர்காலம் குறித்து விரக்தியடைந்துள்ள இளைய தலைமுறையின் பெயரில் இந்நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்பட வாய்ப்பளிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

இந்நாட்டைச் சேர்ந்த 20 இலட்சம் வெளிநாட்டு வாழ் மக்களுக்கு அழுத்தம், ஏமாற்றம் மற்றும் துன்பங்களை உரிமையாக்கிய இந்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கம், தங்களுடைய திறமையற்ற தன்மை, இயலாமை என்பனவற்றையே மீண்டும் மீண்டும் நிரூபிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கையாலாகாத, திறம்பட செயற்படத் தெரியாத அரசாங்கம், நொடிக்கு நொடி மக்களை பழிவாங்குவதும் சட்டியிலிருந்து அடுப்பிற்குள் தள்ளுவதையுமே மேற்கொண்டு வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், உடனடியாக இந்த மோசடியான போலி ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து புதிய மக்கள் ஆணைக்கு அனுமதியளிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் அடுத்த மூன்றாண்டுக்கான நிறைவேற்றுக் குழு

## அஷ்-ஷைக் முப்தி றிஸ்வி மீண்டும் தலைவராக தெரிவு



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புதிய நிறைவேற்றுக் குழுத் தெரிவுக்கான மத்திய சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் (18) சனிக்கிழமை பிற்பகல் 03:30 மணிக்கு கண்டி கட்டுகல ஜும்ஆ மஸ்ஜிதில் ஆரம்பமானது.

இதில் அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித்தினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதோடு பொருளாளர் அஷ்-ஷைக் ஏ.எல்.எம். கலீல் கணக்கறிக்கையை சமர்ப்பித்தார். அதன் பின்னர் தலைவர் உரை அஷ்-ஷைக் முப்தி எம்.ஐ.எம். றிஸ்வியினால் நிகழ்த்தப்பட்டது. அத்துடன் பழைய நிறைவேற்றுக்குழு கலைக்கப்பட்டது.

ஜம்இய்யா சட்டயாப்பின் பிரகாரம் அதனது நிறைவேற்றுக் குழு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஜம்இய்யாவின் மத்திய சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

மேற்படி தெரிவின்போது தற்காலிகத் தலைவராக அஷ்-ஷைக் எம்.எல்.எம். இல்யாஸ் கடமையாற்றினார். அவருக்கு உதவியாக அஷ்-ஷைக் ஐ.எல்.எம். ஹாஷிம் ஷுரியும் கலாநிதி அஷ்-ஷைக் ஏ. அஸ்வர் அஸாஹிமும் கடமையாற்றினர்.

மத்திய சபை உறுப்பினர்களான 24 மாவட்டக் கிளைத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் உட்பட 103 பேர் அழைக்கப்பட்டிருந்த மேற்படி கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பின்வரும் 30 பேர்கள் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் அவ்வாறே பதவித் தாங்குனர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதன்படி நிர்வாக சபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு,

அஷ்-ஷைக் முப்தி எம்.ஐ.எம். றிஸ்வி - தலைவர், அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித் - செயலாளர், அஷ்-ஷைக் ஏ.ஏ. அஹ்மத் அஸ்வர் - பொருளாளர், அஷ்-ஷைக் எச். உமர்தீன் - உப தலைவர், அஷ்-ஷைக் எம்.ஜே. அப்துல் காலிக் - உப தலைவர், அஷ்-ஷைக் ஏ.எல்.எம் றிழா - உப தலைவர், அஷ்-ஷைக் ஐ.எல்.எம் ஹாஷிம் - உப தலைவர், அஷ்-ஷைக் ஏ.எல்.எம் கலீல் - உப தலைவர், அஷ்-ஷைக் எம்.எஸ்.எம் தாஸீம் - உப செயலாளர், அஷ்-ஷைக் ஏ.ஸீ.எம். பாழில் - உப செயலாளர், அஷ்-ஷைக் எம்.கே. அப்துர் ரஹ்மான் - உப பொருளாளர், அஷ்-ஷைக் எம்.எல்.எம். இல்யாஸ் - உறுப்பினர், அஷ்-ஷைக் கே.எம். அப்துல் முக்ஸித் - உறுப்பினர், அஷ்-ஷைக் எம்.எம். ஹஸன் பரீத் - உறுப்பினர், கலாநிதி அஷ்-ஷைக் எம்.எல்.எம். முபாரக் - உறுப்பினர், அஷ்-ஷைக் எம்.எம்.எம். முர்ஷித் - உறுப்பினர், அஷ்-ஷைக் எம்.எச்.எம். புர்ஹான் - உறுப்பினர், அஷ்-ஷைக் எஸ்.எல். நவ்பர் - உறுப்பினர், அஷ்-ஷைக் ஏ.சீ. அகார் முஹம்மத் - உறுப்பினர், அஷ்-ஷைக் எஸ்.ஏ.எம் ஜஃபர் - உறுப்பினர், அஷ்-ஷைக் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் - உறுப்பினர், அஷ்-ஷைக் எம்.எஸ்.எம். ஃபளுத் - உறுப்பினர், அஷ்-ஷைக் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் - கௌரவ உறுப்பினர், அஷ்-ஷைக் எம்.எப்.எம். பாஸில் - உறுப்பினர், அஷ்-ஷைக் முப்தி எம்.எச்.எம். யூஸுப் - உறுப்பினர், அஷ்-ஷைக் எஸ்.எச். ஆதம்பாவா - உறுப்பினர், அஷ்-ஷைக் எம். ரிஃபாஹ் - உறுப்பினர், அஷ்-ஷைக் என்.டீ.எம். லரீஃப் - உறுப்பினர், அஷ்-ஷைக் கே. ஏ. ஸகீ அஹ்மத் - உறுப்பினர், அஷ்-ஷைக் ஏ.எல். அப்துல் கஃப்பார் - உறுப்பினர்.


NLB உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| | திகதி 18.06.2022 சனிக்கிழமை | திகதி 17.06.2022 வெள்ளிக்கிழமை |
|---|---|---|
| மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 4790 | 4789 |
| இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை | ரூ. 7,747,610.00 | ரூ. 8,216,360.00 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | U 6 9 1 2 7 5 | K 7 9 4 6 2 6 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 22,000,866.40 | ரூ. 21,690,659.40 |
| ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 1268 | 1267 |
| இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை | ரூ. 2,510,160.00 | ரூ. 1,706,720.00 |
| வெற்றி இலக்கினம் / வெற்றி இலக்கங்கள் | மிதுனம் 0 1 0 8 3 8 | தனுசு 8 6 7 3 6 6 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 11,903,390.00 | ரூ. 11,903,390.00 |
| கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் | 3032 | 3031 |
| இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை | ரூ. 3,783,620.00 | ரூ. 3,897,760.00 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | A 06 22 69 75 | O 04 11 40 50 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 61,387,565.20 | ரூ. 61,125,010.80 |
| தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் | 820 | 819 |
| இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை | ரூ. 1,989,440.00 | ரூ. 2,170,260.00 |
| வெற்றி இலக்கினம் / வெற்றி இலக்கங்கள் | Z 05 30 61 73 | N 01 23 40 55 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 115,110,069.20 | ரூ. 114,947,059.20 |
| ராசீ சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் | 0099 | 0098 |
| இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை | ரூ. 4,405,820.00 | ரூ. 7,050,585.40 |
| இலக்கினம் / வெற்றி இலக்கங்கள் | ரிஷபம் 24 27 31 61 (விசேட இலக்கினம் ரிஷபம்) | சிம்மம் 40 54 55 60 (விசேட இலக்கினம் சிம்மம்) |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,547,616.00 | ரூ. 2,500,000.00 |
| மெகா பவர் (கோடி 25+) — சீட்டிழுப்பு இலக்கம் | 1138 | 1137 |
| இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை | ரூ. 2,817,600.00 | ரூ. 2,958,880.00 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 257,359,806.00 | ரூ. 257,127,294.00 |
| ஆங்கில எழுத்து / சுப்பர் நம்பர் / வெற்றி எண்கள் | H 15 36 40 43 76 | W 24 01 34 70 71 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 Email: info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web: www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கல்முனை மாநகர பொது நூலகத்தின் பழைய புகைப்படங்களை வெளியிட்டு பொய்ப் பிரசாரம்

**முதல்வர் ஏ.எம்.றகீப் அறிக்கை**

# மாநகர சபை நிர்வாக காரியாலயம் கீழ்த்தளத்தில் இருப்பதே கல்முனை நூலகத்தின் அடர்த்தியான நிலைக்குக் காரணம்

**பொது நூலக நூலகர் தெரிவிப்பு**





(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை ஏ.ஆர்.மன்சூர் பொது நூலகம் தொடர்பாக சில ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்களும் தகவல்களும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும் - என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் நகர திட்டமிடல் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் இந்நூலகம் முழுமையாக புனரமைப்பு செய்யப்பட்டது. அப்போது நூலகத்தின் உட்பகுதிகளிலும் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்குள்ள பெறுமதிவாய்ந்த புத்தகங்கள் சிறிதுகாலம் அலுமாரிகளிலும் பெட்டிகளிலும் பைகளிலும் பேணிப் பாதுகாக்கப்பட்டிருந்தன. உள்ளக புனரமைப்பு வேலைகள் துரிதமாக பூர்த்தியடைந்த பின்னர் அப்புத்தகங்கள் யாவும் வாசகர்களின் பாவனைக்காக வழமைபோல் ராக்கைகளில் முறையாக அடுக்கிவைக்கப்பட்டு, வாசகர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், புனரமைப்பு காலத்தில் எடுக்கப்பட்ட பல வருடங்களுக்கு முந்திய பழைய புகைப்படங்களை சில விஷமிகள் தற்போது முகநூல்களில் பதிவிட்டு, புத்தகங்கள் அனைத்தும் மூடைகளில் கட்டி வைக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டு, இந்நூலகம் வாசகர்களினால் பயன்படுத்த முடியதளவு பெரும் அவலநிலையில் கிடப்பதுபோன்று சித்திரித்துள்ளனர். கடந்த புதன்கிழமை (15) முதன்முறையாக ஒரு நபரால் முகநூலில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த இப்பழைய புகைப்படங்கள் இன்னும் சிலராலும் பகிரப்பட்டிருந்தன. பின்னர் இதன் உண்மைத்தன்மை கண்டறியப்படாமல் சில பத்திரிகைகளிலும் அவை பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

இது மாநகர சபை தொடர்பாக மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்துவதற்காகவும் எம்மீது களங்கம் ஏற்படுத்துவதற்காகவும் வேண்டுமென்றே பரப்பப்படுகின்ற பொய்யான, இட்டுக்கட்டப்பட்ட தகவல்கள் என்பதை இந்நூலகத்திற்கு அன்றாடம் வருகின்ற வாசகர்கள் நன்கறிவார்கள். மேலும், இதன் உண்மை நிலையை கண்டறிய விரும்புவோர் ஒரு தடவை நூலகத்திற்கு விஜயம் செய்து பார்வையிட முடியும்.

மிகவும் பழைமை வாய்ந்த இந்நூலகக் கட்டடம் கல்முனை மாநகர சபையின் முயற்சியினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நகர திட்டமிடல், நீர்வழங்கல் அமைச்சராக பதவி வகித்தபோது, அந்த அமைச்சின் நிதியொதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டு, கடந்த சில வருடங்களாக மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது. கல்முனைப் பிராந்தியத்தில் முதன் முறையாக e library சேவையும் இந்நூலகத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வப்போது வெளிவருகின்ற புதிய நூல்களும் சஞ்சிகைகளும் மாநகர சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு, மாணவர்களினதும் வாசகர்களினதும் அறிவுத்தேடலுக்கு பாரிய பங்களிப்பு வழங்கி வருகிறது. நூலகத்தை நாடி வருகின்ற அனைத்து வாசகர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கல்முனை பொது நூலகத்தின் தற்போதைய நிலை எந்தளவு சிறப்பாக இருக்கிறது என்பதற்கு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்ற புதிய புகைப்படங்கள் சாட்சி பகர்கின்றன.

இவ்வாறு கல்முனை மாநகருக்கு முத்தாய்ப்பாய் அமைந்திருக்கின்ற இந்நூலகம் தொடர்பில் பிழையான தகவல்களை வெளியிட்டு, அதனை ஓர் அசிங்கமான இடமாக சித்திரிப்பதன் மூலம் குறித்த விஷமிகள் அடைகின்ற இலாபம்தான் என்ன? இது கல்முனை மாநகர சபையின் கீழ் வருகின்ற ஒரு விடயம் என்பதற்காக அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே இவ்வாறு உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு, அரசியல் நோக்கம் கொண்ட குறித்த விஷமிகள் வழமைபோல் எம்மீது அவதூறுகளை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர்.

இவர்களால் எப்போதும் இவ்வாறான பொய்களையும் அபாண்டங்களையும் கட்டவிழ்த்து விடுகின்ற துர்நடத்தைகளில் மாத்திரமே ஈடுபட முடியும். மாறாக, கல்முனை மாநகரின் அபிவிருத்திக்கோ, இந்நூலகத்தின் வளர்ச்சிக்கோ ஒரு செங்கல்லைத்தானும் கொண்டுவர இவர்களால் ஒருபோதும் முடியாது என்பதை மக்கள் அறிவார்கள் - என்று கல்முனை மாநகர முதல்வர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

(மாளிகைக்காடு நிருபர்)

முறையான களஞ்சியசாலை இல்லாத காரணத்தினாலும், கல்முனை மாநகர சபை நிர்வாக காரியாலயத்தின் ஒரு பகுதியை வாசிகசாலை கீழ்தளத்தில் இயக்கிக்கொண்டிருப்பதனாலும் தளபாடங்கள் மற்றும் பழைய மற்றும் புதிய பத்திரிகைகளை வாசிப்பு பகுதியில் சேமித்து வைக்கவேண்டிய நிலை உருவானதாக கல்முனை மாநகர பொது நூலக நூலகர் தெரிவித்தார்.

கல்முனை வாசிகசாலை வாசகர்களுக்கு உகந்ததாக இல்லாமல் இருப்பது தொடர்பில் வாசகர்கள் தெரிவித்த கருத்தை அடிப்படையாக கொண்டு வெளியிடப்பட்ட செய்திக்கு கல்முனை மாநகர முதல்வர் தரப்பிலிருந்து விளக்கமளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பிலான உண்மை நிலையை அறியும் நோக்கில் கல்முனை மாநகர பொது நூலகரை சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்துதெரிவித்த அவர், கல்முனை நூலகம் முழுமையாக இயங்கிக்கொண்டிருந்த போது சில பல காரணங்களுக்காக கல்முனை மாநகர சபை நிர்வாக காரியாலயத்தின் ஒரு பகுதியை வாசிகசாலை கீழ்தளத்தில் இயக்க மாநகர சபையினால் முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் கீழ்தளத்திலிருந்த நூல்களை மூட்டைகளில் கட்டி மேலே எடுத்து வந்தோம். நூல் அடுக்கிவைக்கும் அலுமாரிகளை மேலே ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டமையினால் இந்த நிலை உருவானது. இருந்தாலும் எங்களிடம் களஞ்சியசாலை இல்லாத காரணத்தினால் தான் வாசிப்பு பகுதியில் இதனை தேக்கிவைக்கவேண்டிய நிலை உருவானது. பின்னர் இந்த நூல்களை துரிதகதியில் ஒழுங்காக அடுக்கி வைத்துள்ளோம். இருந்தாலும் தளபாடங்களை அடுக்கிவைக்க இடமில்லாத காரணத்தினால் தான் வாசிப்பு பகுதியின் ஒருபகுதியில் சீராக அடுக்கிவைத்துள்ளோம். இந்த பிரச்சினைகளினால் பழைய பத்திரிகைகளை சேமித்து வைக்க முடியாமல் ஆறுமாதங்களுக்கும் ஒரு வருடத்துக்குமாக பத்திரிகைகளை இங்கிருந்து அகற்றி வருகிறோம். விரைவாக புதிய வாசிப்பு பகுதியை நிர்மாணிக்க ஆயத்தங்களை செய்து வருகின்றோம் என்றார்.

இது தொடர்பில் மேலும் தகவல்களை பெரும் நோக்கில் வாசிகசாலை உத்தியோகத்தர்களை அணுகி பேசிய போது இந்த வாசிகசாலையை கல்முனை பிரதேசம் மட்டுமன்றி கல்முனை தனியார் கல்விநிலையங்களுக்கு பிரத்யோக வகுப்புக்கு வரும் அம்பாறை மாவட்ட மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் பாவிக்கின்றனர். இங்கு மாணவர்கள் இருந்து படிக்கும் அளவுக்கு இட மற்றும் வளப்பற்றாக்குறை குறைவாக இருக்கிறது. தளபாடங்கள் கலைத்து போடக்கூட இடமில்லை. முன்னர் இருந்தது போன்று முழுமையாக வாசிகசாலையை இயக்கினால் இந்த பிரச்சினைகள் இருக்காது. மிக அடர்த்தியாகவே இந்த வாசிகசாலை இயங்குகிறது. அடர்த்தியாக இருக்க காரணம் கீழ்தளத்தில் மாநகர சபையின் நிர்வாக காரியாலயம் இயங்குவதே. இடவசதி தொடர்பில் கரிசனை எடுத்து உரியவர்கள் நடவடிக்கை எடுத்தால் இந்த நூலகம் இன்னும் வினைத்திறனுடன் இயங்கும் என்றனர்.

# எரிபொருள் தட்டுப்பாட்டால் திருகோணமலை மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு



(கந்தளாய் நிருபர்

திருகோணமலை மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதாக பாதிப்படைந்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டால் கடலுக்கு தொழிலுக்குச் செல்வதில் மீனவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம்மாவட்டத்தின் திருக்கடலூர், புல்மோட்டை, நிலாவெளி மற்றும் ஜமாலியா போன்ற பிரதேசங்களிலுள்ள மீனவர்களின் படகுகள், வள்ளங்கள் கரையோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு நீண்ட வரிசைகளில் எரிபொருளுக்காக காத்திருந்தாலும் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமமாக உள்ளது. இதனால் மீனவர்களின் கடற்றொழில் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது.

மீனவர்களுக்கு எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்காக மீன்பிடித் திணைக்களம்



இலகுவான வழிமுறைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

# பரீட்சை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் எரிபொருள் வழங்கக்கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்




(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரீட்சை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், மதிப்பீட்டு நிலையங்களுக்கு செல்வதற்கான எரிபொருளை வழங்கக்கோரி கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரீட்சை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு பரீட்சை மதிப்பீட்டு நிலையத்திற்கு செல்வதற்கான எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு இலகுவான பொறிமுறை ஒன்றினை கல்வி அமைச்சும், இலங்கை பரீட்சை திணைக்கள ஆணையாளரும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆதரவாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நேற்று (19) காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி முன்பாக பாரிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் பொன்னுத்துரை உதயரூபன் தலைமையில் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட சுமார் 1200 ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள்.

மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர தேசிய பாடசாலை, புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை, புனித மிக்கேல் கல்லூரி போன்ற பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களே ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு எரிபொருள் வழங்குவதில் இலகுவான பொறிமுறையை வழங்கவேண்டுமென கோரிக்கையை முன்வைத்தார்கள். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையை நடமுறைப்படுத்து, பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களின் மனநிலையை குழப்பி கல்வியை சீரழிக்காதே, பரீட்சை மதிப்பீட்டாளர்களுக்கு உடன் எரிபொருள் வழங்கு என சுலோக அட்டையை ஏந்தியவாறு ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் கல்லூரியிலிருந்து ஆரம்பித்து கோட்டைமுனை பாலத்தினூடாக மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையம் வரை சென்று மீண்டும் அங்கிருந்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரை சந்திக்க மாவட்ட செயலகத்திற்கு சென்றிருந்தார்கள்.

பொலிஸ் நிலையம் சென்றடைந்த ஆசிரியர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தார்கள். பொலிஸார் எரிபொருள் வழங்குவதற்கு பொறுப்பில்லை எனத் தெரிவித்தார்கள். மீண்டும் பரீட்சை மதிப்பீட்டு ஆசிரியர்கள் மனவேதனையுடன் பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களுக்கு சென்றடைந்தார்கள்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முன்னுரிமையளிப்பதற்கான பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை மதிப்பீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடிதத்தை எந்தவொரு எரிபொருள் நிலைய பொறுப்பாளர்களும், பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸாரும் முன்னுரிமை வழங்கவில்லை என பரீட்சை மதிப்பீட்டு ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

# மட்டக்களப்பில் அறிமுகப்படுத்தப்படும் குடும்ப அட்டை மூலம் மாத்திரமே அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்

**எதிர்வரும் புதன்கிழமை முதல் நடைமுறையென மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன் தெரிவிப்பு**

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருள் மற்றும் எரிவாயு, அத்தியாவசிய பொருட்களை பிரதேச ரீதியாக எதிர்வரும் புதன்கிழமைமுதல் குடும்பங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் அட்டை ஊடாக மட்டுமே கொள்வனவு செய்யமுடியும் - என மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (17) எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மற்றும் அத்தியாவசிய திணைக்களப் பணிப்பாளர்கள், இராணுவத்தினர், பொலிஸார் பிரதேச செயலாளர்களை அழைத்து இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக அரசாங்க அதிபர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 32 ஆயிரத்து 720 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக வேளாண்மை பயிரப்பட்டுள்ளது. இந்த வேளாண்மை அறுவடை எதிர்வரும் வாரம் ஆரம்பிக்கப்பட்டு, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முடிவடைய இருக்கின்றது.

இந்த செய்கை பண்ணப்பட்டுள்ள வேளாண்மை அறுவடை செய்ய ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 752 லீற்றர் டீசல் தேவைப்படுகின்றது. அதேவேளை, எமக்கு வாராந்தம் மீன்பிடியாளர்களின் தேவையை நிவர்த்திசெய்வதற்காக ஒரு கிழமைக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 22 லீற்றர் மண்ணெண்ணெயும் 6 இலட்சத்து 61 ஆயிரம் டீசலும் தேவைப்படுகின்றன.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கிடைக்கின்ற மண்ணெண்ணெயும் டீசலும் குறைந்தளவுதான் கிடைக்கின்றது. எனவே, இந்த இக்கட்டான சூழலிலே அத்தியாவசிய சேவையில் கடமையாற்றுகின்ற சுகாதாரத்துறையினர் நீர்வழங்கல் துறையினர், கல்வித்துறையினர் போன்ற பல்வேறு துறையினர் எரிபொருளை பெறுவதில் பாரிய அசௌகரியங்களை



எதிர்நோக்குகின்றனர்.

இந்த நெருக்கடியை தீர்ப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மற்றும் அத்தியாவசிய திணைக்களப் பணிப்பாளர்கள், இராணுவத்தினர், பொலிஸார், பிரதேச செயலாளர்களை அழைத்து கலந்துரையாடி ஒரு குடும்பத்துக்காக அத்தியாவசியப் பொருட்களை வழங்கும்போது குடும்ப அட்டை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இந்த அட்டையை ஒவ்வொரு குடும்பமும் வைத்திருப்பதன் மூலம் இதனைக் காட்டி அவர்களது அவசிய தேவைக்கான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும். அதாவது, எரிபொருளாக இருந்தாலும் சரி எரிவாயுவாக இருந்தாலும் சரி. எனவே, இந்த அட்டையை விநியோகிக்கும் பணி தற்போது ஆரம்பித்துள்ளதுடன், எதிர்வரும் புதன்கிழமை (22) இந்த அட்டை அறிமுகப்படுத்தப்பட்டு அன்றைய தினத்திலிருந்து இந்த அட்டையின் மூலமாக இந்த அவசியமான பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கின்றோம்

கிராம உத்தியோகத்தர் மூலம் இந்த அட்டை விநியோகிக்கப்படுகின்றது. ஒரு குடும்பத்துக்கு ஒரு அட்டை. இந்த அட்டை ஒவ்வொரு பிரதேசத்துக்கும் வேறு வேறு நிறத்தில் வழங்கப்படும். எனவே, அந்தந்த பிரதேசங்களிலல் இருக்கின்ற மக்கள் அந்தந்த பிரதேச எல்லைக்குள் இருக்கின்ற விநியோகத்தரிடம் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். அதேவேளை, வேறு பிரதேசத்தில் பொருளை பெற்றுக்கொள்ளமுயாது.

பெற்றோல் நிலைய உரிமையாளர்களால் முன்வைக்கப்பட்ட ஒருசில சம்பவங்கள் ஒரே குடும்பத்தைச் சோந்த இரண்டு பேர், மூன்று பேர் வரிசையில் காத்திருக்கின்றனர். ஒரு குடும்பத்துக்கு தேவையான அளவைவிட அதிகமாக எரிபொருளை பெற்று விற்பனை செய்கின்றனர். இதன்மூலம் மற்றவர்கள் பெற்றுக்கொள்வதை தடுப்பதாக குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

எனவே, மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு அன்பாக கேட்டுக்கொள்வது, இந்த இக்கட்டான சூழலில் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு அவ்வாறான செயல்களில் ஈடுபடவேண்டாம். எல்லா மக்களும் மட்டக்களப்பு மக்கள் எல்லா மக்களுக்கும் அரிய அளவில் கிடைக்கின்ற வளத்தை ஓரளவுக்கு கிடைக்கக்கூடியமாதிரி பங்கிடுவதற்கு உங்களது ஒத்துழைப்பு அவசியம்- என்றார்.

# கல்முனை பிராந்தியத்தில் மாத்திரம் மனித பாவனைக்கு தகுதியற்ற 12.8 மில்லியன் பெறுமதியான மருந்துகள்; 40 மில்லியன் பெறுமதியானவை காலாவதி

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் றிபாஸ் தகவல்

(மாளிகைக்காடு நிருபர்)

நாட்டின் தற்போதைய நிலையில் மருந்துத் தட்டுப்பாடு அரச வைத்தியசாலைகளுக்கு மட்டுமல்ல, மருந்தகங்களுக்கும் இருக்கிறது. மருந்தகங்களில் இல்லாத நிறைய மருந்துகள் அரச வைத்தியசாலைகளிலும், களஞ்சியசாலைகளிலும் இருக்கின்றன. எல்லா விடயங்களுக்கும் நாம் அரசியல்வாதிகளை குற்றஞ்சாட்டுகிறோம். ஆனால், அரச அதிகாரிகளே இந்த விடயங்களுக்கு பெரும்பாலும் பொறுப்பானவர்கள் என்பது எனது கருத்து. அண்மையில் வெளியான அறிக்கையின்படி 6,692 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் களஞ்சியங்களில் பாவனைக்கு தகுதியற்றதாக அடையாளம் கண்டு எப்படி அவற்றை அழித்துவிடுவது என்பது பற்றி தெரியாமல் இருக்கிறது. எமது பகுதியில் (கல்முனை பிராந்தியத்தில்) மட்டும் தகுதி இழந்த 12.8 மில்லியன் பெறுமதியான மருந்துகள் இருப்பதுடன், காலாவதியான மருந்துகளும் 40 மில்லியன் ரூபா அளவில் இருக்கின்றன. யார் இதற்கு பொறுப்புக்கூறுவது. அரசாங்கத்தை மட்டும் குறைகூறிக்கொண்டிருந்தால் இதற்கு வகை சொல்வது யார்? இது யாரின் வரிப்பணம்? இந்த வீண்விரயத்திற்கு யார் பொறுப்பு கூறுவது? எனக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் கேள்வியெழுப்பினார்.

மருந்தக உரிமையாளர்களுக்கு கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்த மருந்து வீண்விரயங்களும், காலாவதி பிரச்சினைகளும், தர நிர்ணய பிரச்சினைகளுக்கு தனியார் பாமசிகளுக்கு அதிகமாக ஏன் வருவதில்லை. ஏனென்றால், அது சொந்தப்பணம் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வு இருப்பதே காரணம். இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு காரணம், அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அரசாங்கம் என்பது அரசியல்வாதிகள் கிடையாது. அதிகாரிகள்தான் அரசாங்கம். இந்த நாட்டின் சீரழிவுக்கு நாமும் பொறுப்பு என்பதை நாம் உணரவேண்டும்.



நாம் பொறுப்புணர்வில்லாமல் செய்த ஒவ்வொரு செயலும் இந்த நாட்டின் சீரழிவுக்குக் காரணமாக அமைந்துள்ளது. மாற்றம் நம்மிலிருந்து, நமது வீட்டிலிருந்து வர வேண்டும். நாம் இங்கு வீணாக்கும் ஒவ்வொரு சொட்டு தண்ணீரும் உலகில் எங்கோ ஒரு மூலையில் யாரோ தாகத்துடன் இருப்பதை உறுதிப்படுத்துகிறோம் என்பதை மறந்துவிட முடியாது. இவற்றையெல்லாம் சீரமைத்தல் தொடர்பில் சிந்திக்க எமது விஞ்ஞானிகளோ, பல்கலைக்கழகங்களோ, புத்திஜீவிகளோ தயாரில்லை. நாம் மாற்றுவழிகள் தொடர்பில் சிந்திப்பதில்லை. நமது நிலைப்பாடு இவைகள் பற்றி யாரோ கூறும்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது.

உலகில் ஆயுர்வேதம் பெரியளவில் பொருளாதாரத்தைக் குவிக்கும் துறையாக மாறியிருக்கிறது. நமது நாட்டில் கிழக்கில் சாதாரணமாக விளையும் ஆமணக்கு போன்ற எத்தனையோ வகையான மூலிகைகளை இந்தியாவிலிருந்து கிழக்குக்கு மட்டுமே 500 மில்லியன் செலவழித்து இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். நிலவேம்பு இலை கிலோ 35,000 ருபா, ஆமணக்கு கிலோ 2,500 ரூபா, நெருஞ்சி கிலோ 690 ரூபாவுக்கு எமது அரசாங்கம் வாங்கிக்கொண்டிருக்கிறது. இப்படி முறையான திட்டமிடல்கள் இல்லாதமையினால் நாடு முழுவதிலும் பல ஆயிரம் கோடி ரூபாவை நாம் வீணடித்துக்கொண்டிருக்கிறோம். இவ்வளவு வீணடிப்புகளை தாங்கிக்கொண்டும் எமது நாடு எப்படி செல்வச்செழிப்பாக இருந்தது என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

வாளியில் பெரிய ஓட்டையை போட்டுவிட்டு தண்ணி நிறைக்கும் விடயமாகவே நாட்டின் இன்றைய நிலை தெரிகிறது. மக்களின் கடின உழைப்பினால் இந்த நாடு கடந்த காலங்களில் தலைநிமிர்ந்து நின்றது. பாலைவனத்திலும், குளிரிலும் கஷ்டப்பட்ட ஒவ்வொரு இலங்கையரின் உழைப்பே எமது நாட்டின் கௌரவத்திற்கு காரணம். எமது பொறுப்பை நாம் உணர்ந்து நடக்கவேண்டும். சுகாதாரத்துறையில் மக்களுக்கு கிடைக்கவேண்டிய அதியுச்ச பயனை மக்களுக்கு வழங்கவே நாங்கள் அரச சம்பளம் பெற்ற அதிகாரிகளாக இருக்கிறோம். பல்வேறு தரப்புகளுடனும் ஆரோக்கியமான கருத்தாடல்களை மேற்கொண்டு பொதுமக்களுக்கு அந்நியோன்யமாக சேவையை வழங்கவே நாங்கள் தயாராக இருக்கிறோம். வீதி சமிக்ஞைகள் அமைக்கப்பட்டிருப்பது பயணத்திற்கு இடையூறு செய்வதற்கல்ல. மாறாக, எல்லா பயணிகளும் பாதுகாப்பாகவும், சௌகரியமாகவும் வீதியில் பயணிக்கவே. வாகனப் போக்குவரத்து இல்லாத நள்ளிரவில் கூட நான் வீதி விளக்குகளை மீறி செல்வதில்லை. சட்டத்திட்டம் தொடர்பில் எனது தந்தை எனக்கு சரியாக வழிகாட்டியுள்ளார். தந்தை சொல்லை மதிப்பதில் நான் பெருமையடைகிறேன். நாம் செய்யும் தவறுகள், அதிகார தோரணைகள் இன்னுமொருவரை பாதித்துவிடக்கூடாது. நாம் செய்யும் தவறுகளுக்கு வேறு யாரோவெல்லாம் பாதிப்பை அனுபவிப்பது, மரணிப்பது தர்மமல்ல.

சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. எமது நாட்டின் சட்டங்கள் காலனித்துவ காலத்தில் உருவாக்கப்பட்டவை. அந்த சட்டங்கள் தற்காலத்திற்கு ஏற்றாற்போல மாற்றப்படாமையினால் காலாவதியான சட்டங்கள் கூட எம்மை கட்டுப்படுத்துகின்றன. அந்த சட்டங்கள் மாற்றப்படவேண்டிய தேவை இருக்கிறது. நீதிமன்றத்திலும், பொலிஸிலும், அதிகாரத்திலும் அந்த சட்டங்கள் வழமையாக இருந்துவருகின்றன. அதனால் அதனை மீறுகின்றவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டிய கடமை அதிகாரிகளுக்கு இருக்கிறது. அதனால்தான் சிலநேரங்களில் அதிகாரிகள் கடினமாக நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது - என்றார்.

# மட்டக்களப்பில் உணவு உற்பத்திக்கான தேசிய போராட்ட நிகழ்ச்சித் திட்ட கலந்துரையாடல்





(மட்டக்களப்பு நிருபர்)

உணவு உற்பத்திக்கான தேசிய போராட்டம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பணிபுரியும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது எதிர்வரும் காலங்களில் உள்ளூர் உற்பத்தியினை நுகர்வோருக்கு தங்குதடையின்றி வழங்குவதற்கு சமூக பொறுப்புடன் கடமையாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் வாழ்வாதார உதவிகள் மற்றும் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தும் செயற்றிட்டம் தொடர்பாகவும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வறிய கிராமங்களில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட போசாக்கு குறைந்த சிறுவர்களுக்கு போசாக்கான உணவுகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டதுடன், மாவட்டத்தில் உற்பத்தியாகும் உணவுப்பொருட்களை எமது பிரதேசத்திற்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வீட்டுத்தோட்டம், நன்னீர் மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்பு போன்ற செயற்றிட்டங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தபட்டு வருகின்றமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இவ்வாறான செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டுமென்று அரசாங்க அதிபரினால் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின்போது மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் ராஜித சிறி அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம்

(அம்பாறை நிருபர்)

கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ராஜித சிறி தமிந்த அம்பாறை மாவட்டத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

கடந்த ஜூன் 2ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கடமையை பொறுப்பேற்ற பின்னர் குறித்த கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ராஜித சிறி தமிந்த, அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்கு சென்று குறைநிறைகளை ஆராய்ந்துள்ளார்.

இந்நிலையில், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பொலிஸ் நிலைய சிரேஷ்ட அதிகாரிகள், கனிஷ்ட அதிகாரிகளின் பிரச்சினைகளை ஆராயும்முகமாக வருகை





தந்த அவர் கல்முனை, பெரியநீலாவணை, சவளக்கடை, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், அக்கரைப்பற்று உள்ளிட்ட பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கும் விஜயம் செய்திருந்தார்.

இவ்வாறு விஜயம் செய்த பின்னர் கடந்த காலங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட புதிய பொலிஸ் நிலையங்களுக்கான வளப்பற்றாக் குறைகளை எதிர்வரும் காலங்களில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், சில பொலிஸ் நிலையங்களின் அமைவிடம் மற்றும் பொதுமக்கள் தேவை கருதி மிக விரைவாக நிரந்த பொலிஸ் நிலையமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த விஜயத்தின்போது அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே.ரத்னாயக்க, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம். எல்.புத்திக, கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர், பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால், சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜயலத், அக்கரைப்பற்று, சவளக்கடை, காரைதீவு, நிந்தவூர்,பொலிஸ் நிலை பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



அரசியல் சூதாட்டத்தால் 21இற்கு ஆபத்தாம் எண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜீத் தம்பி சொல்லிப்போட்டாரு எலுவா?

இப்ப நரியாட்டத்தாலதான் எல்லாமே நாசமறுக்கப்போகுது பாருங்கவன்.. ஆட்சியும் மாறாது, கோட்டாவும் மாறாது, இப்படியே கதயால காலத்த கடத்துறதுதான் மிச்சம்..

சரிடாம்பி நீயும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து வாயாலதானே வடை சுடுறா.. உன்னாலயும் ஒழுங்கா ஏதும் செய்யமுடியல்லையே?

# திருமலை பேரமடுவ பகுதியில் யானை தாக்குதலில் ஒருவர் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேரமடுவ பகுதியில் யானையின் தாக்குதலினால் நேற்று முன்தினம் (18) மாலை 5 மணியளவில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் மெதிரிகிரிய, விஜேபுர பகுதியைச் சேர்ந்த சுனில் (40 வயது) எனவும் தெரியவருகின்றது.

மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த நபரை யானை தாக்கியதாகவும், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது மெதிரிகிரிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை முடிவுற்ற பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பில் விசாரணைகளை மெதிரிகிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பயிர்ச்செய்கைக்கு காணிகள் விடுவிக்கப்பட்டபோதும் அவை வெற்றுநிலங்களாகவே காட்சியளிக்கின்றன

## நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள







(திருகோணமலை, கிண்ணியா நிருபர்கள்)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (17) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டம் பல வளங்களைக் கொண்ட மாவட்டமாக காணப்படுகின்றது. அத்துடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் உள்ளன. சுற்றுலாவுக்கு பிரசித்தமான பல இடங்கள் உள்ளன.. மாவட்டத்தின் அரசாங்க அதிபர் பதவியை பொறுப்பேற்று நடத்தும் முதலாவது கூட்டமாக இக்கூட்டம் நடைபெறுகின்றது. இம்மாவட்டத்தின் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம இதன்போது கேட்டுக்கொண்டார்.

மாவட்டத்தின் அனைத்து அரச அலுவலகங்களிலும் உணவுப்பயிர்களை பயிரிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் திணைக்களத் தலைவர்களிடம் வேண்டிக்கொண்டார்.

ஆக்கபூர்வமான முன்மொழிவுகளுக்கு காணிகளை விடுவிக்கும்போது மாவட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் பல காணிகள் வெவ்வேறு வேலைத்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டபோதும் அவை வெற்று நிலங்களாக இருப்பதாக இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார்.

காணி, கல்வி, விவசாயம், மீன்பிடி, வீட்டுத்தோட்டம், பொதுவான பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

# சமூகத்தை சீர்படுத்துவது அன்றைய கலாசாரமா - இன்றைய கலாசாரமா? ஆலையடிவேம்பு தமிழ் இலக்கியப் பேரவையில் சிறப்புப் பட்டிமன்றம்





(ஆலையடிவேம்பு நிருபர்)

ஆலையடிவேம்பு தமிழ் இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிறப்பு பட்டிமன்றம் நேற்று முன்தினம் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவரும் மட்டக்களப்பு உளவியல் ஆலோசனை மையத்தின் உளவள ஆலோசகருமான க.கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற பட்டிமன்ற நிகழ்வில், பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் கலந்துகொண்டதுடன், அருளாளராக உகந்தைமலை முருகன் ஆலய உதவிக்குரு சிவஸ்ரீ ஆ.கோபிநாத் சர்மா மற்றும் சிறப்பு விருந்தினராக அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர்கள் பேரவைத் தலைவர் தேசபந்து ஜலீல் ஜீ கலந்துகொண்டார்.

நிகழ்வில் அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன், மங்கள விளக்கேற்றலும் இறைவணக்கம் மற்றும் பேரவையின் செயலாளர் வி.சிவன்செயலினால் மௌத் ஓகன் மூலம் தேசிய கீதமும் இசைக்கப் பட்டது.

தொடர்ந்து ஆனந்தியின் வரவேற்புப் பாடலும் இடம்பெற்றதுடன், தலைமையுரையை தலைவர் க.கிருஸ்ணமூர்த்தி வழங்கினார். இதன்பின்னராக பிரதேச செயலாளர் வி.பபாகரனின் பிரதம அதிதி உரை இடம்பெற்றதுடன், பட்டிமன்றத்தினை ஏற்பாடு செய்த ஆலையடிவேம்பு தமிழ் இலக்கியப் பேரவையை அவர் பாராட்டினார்.

சமூகத்தை சீர்படுத்துவது அன்றைய கலாசாரமா? இன்றைய கலாசாரமா? எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற பட்டிமன்றமன்றத்தின் நடுவராக இந்து இளைஞர் மன்றம் மற்றும் சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்ல தலைவருமான த.கயிலாயப்பிள்ளை கடமையாற்றினார்.

இப்பட்டிமன்றத்தில் அன்றைய கலாசாரமே சமூகத்தை சீர்படுத்துகின்றது எனும் தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத்துறை தலைவர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா மற்றும் தமிழ் இலக்கியப் பேரவைத் தலைவர் க.கிருஸ்ணமூர்த்தி, ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.குணாலன் ஆகியோர் தமது வாதங்களை முன்வைத்தனர்.

''இன்றைய கலாசாரமே சமூகத்தை சீர்படுத்துகின்றது'' எனும் தலைப்பில் கவிஞர் ஓய்வுநிலை அதிபர் பாவணர் அக்கரைப்பாக்கியன், ஓய்வுநிலை விரிவுரையாளர் என்.செல்வநாதன், அதிபர் தேசமனிய ஸ்ரீ மணிவண்ணன் ஆகியோர் வாதாடினர்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் முதன்முறையாக ஏற்பாடுசெய்யப்பட்ட இப்பட்டிமன்றத்தைப் பார்வையிட அதிகளவான இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மழை - வெள்ளத்தில் தத்தளிக்கும் பங்களாதேஷ்: 25 பேர் உயிரிழப்பு; 20 இலட்சம் பேர் நிர்க்கதி







பங்களாதேஷில் இடைவிடாமல் கொட்டித் தீர்த்த கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவால் இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 இலட்சம் பேர் வீடு வாசல்களை இழந்து முகாம்வாசிகளாக மாறியுள்ளனர்.

பங்களாதேஷின் கடந்த வாரம்முதல் தொடர்ந்து கடும் மழையால் பெய்துவருகிறது. நாட்டின் வடகிழக்கேயுள்ள ஏராளமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்நிலையில், இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 3 சிறுவர்கள் மின்னல் தாக்கி உயிரிழந்தனர்.

இது தவிர, சிட்டகாங் மலைப்பகுதியில் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வீடுகளில் சிக்கியுள்ளவர்களை படகுகளை கொண்டு மீட்கும் பணி மும்முரமாக நடைபெறுகிறது. உயர்நிலை மாணவர்களுக்கு நடத்தவிருந்த பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டு, பாடசாலைகளில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காலநிலை மாற்றமே பருவம் தவறிய மழைக்குக் காரணம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சிலேட் உள்ளிட்ட பகுதிகளில் மீட்புப் பணி, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகப் பணி ஆகியவற்றில் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

**வெள்ளத்தில் மூழ்கிய அசாம்**

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் இடைவிடாது பெய்யும் கன மழை காரணமாக பல பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. நாகான் மாவட்டத்தின் காம்பூர் பகுதியில் வெள்ளநீர் சூழ்ந்த நிலையில், மக்கள் அப்பகுதியிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

அதேபோல், சிராங் மாவட்டத்தில் சூழ்ந்த வெள்ளநீரால், ஆயிரக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், வெள்ளநீரில் சிக்கிய 100இற்கும் மேற்பட்டோரை மாநில பேரிடர் மீட்புப்படையினர் பத்திரமாக மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

**தென் சீனாவில் கடும் மழை - பெரும் வெள்ளம்**

சீனாவில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தால் தென் மாகாண நகரங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

அடுத்து 24 மணிநேரத்திற்கு 7 மாகாணங்களில் கடுமையான புயல் மற்றும் கனமழை, பெரும் வெள்ளம் ஏற்படக்கூடும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

Guangxi Zhuang தன்னாட்சி மாகாணத்தில் பெய்த கடும் மழையால் வீடுகள், கடைகள் நீரில் மூழ்கின. மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கி படையெடுத்துள்ளனர்.

## புனித ஹஜ் யாத்திரை ஜுலை 7இல் ஆரம்பம்



இஸ்லாமிய நாட்காட்டியின்படி இந்த ஆண்டு ஹஜ் புனித யாத்திரை ஜுலை 7ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

அன்றைய தினம் மக்கா, மதினா ஆகிய இரண்டு புனித நகரங்களுக்கு வரும் இஸ்லாமியர்களுக்கு கொவிட் வழிகாட்டு நெறிகள், பயணத் திட்டங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. முகக்கவசம் அணிவது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் சுமார் 20 இலட்சம் முஸ்லிம்கள் ஹஜ் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்மூலம் ஆண்டுதோறும் சவூதி அரேபிய அரசுக்கு 12 பில்லியன் டொலர் வருமானம் கிடைக்கிறது. கடந்த ஆண்டில் கொவிட் காரணமாக 60 ஆயிரம் பயணிகளுக்கு மட்டுமே ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதி கிடைத்துள்ளது.

# உலக செய்திகள்

## இராமநாதபுரத்தில் கரையொதுங்கிய இலங்கை மீன்பிடிப் படகு




*(மன்னார் நகர் நிருபர்)*

இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி கடற்கரைப் பகுதியில் இலங்கை மீனவர்கள் பயன்படுத்தும் மீன்பிடிப் படகொன்று நேற்று (19) கரையொதுங்கியுள்ளதாக மரைன் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற மரைன், கியூ பிரான்ஞ் பொலிஸார், படகில் கடத்தல்காரர் யாரும் கடத்தல் பொருட்களை கொண்டுவந்தார்களா அல்லது கடல் சீற்றம் காரணமாக நங்கூரம் அறுந்து படகு கடலில் மிதந்து வந்து கரை ஒதுங்கியதா என பல்வேறு கோணங்களில் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தன் சொந்த திருமணத்திற்கு செல்ல மறந்த எம்.எல்.ஏ.

**ஒடிசாவில் சம்பவம்; பொலிஸில் வழக்கு பதிவு**



ஒடிசாவில் தன் சொந்த திருமணத்திற்கு செல்ல மறந்த எம்.எல்.ஏ. மீது பொலிஸார் வழக்கு பதிவுசெய்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

Tirtol தொகுதி எம்.எல்.ஏ. பிஜெய் சங்கர் தாஸ் தன்னை திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்ததாகவும், கடந்த வெள்ளிக்கிழமை பதிவு திருமணம் செய்ய திட்டமிட்டிருந்த நிலையில், திருமணத்திற்கு அவர் வரவில்லை என்றும் செல்போன் அழைப்புகளை தவிர்த்ததாகவும், அவரது உறவினர்கள் தன்னை மிரட்டுவதாகவும் பெண்ணொருவர் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

அதேநேரம், கடந்த மே மாதம் திருமணம் செய்துகொள்ள பதிவு செய்த நிலையில், திருமணத்திற்கு இன்னும் 60 நாட்கள் இருப்பதாகக் கருதியதாகவும், எவரும் தனக்கு நினைவூட்டாததால் திருமணத்திற்கு செல்ல மறந்ததாகவும் பிஜெய் சங்கர் தெரிவித்துள்ளார்.

## துருக்கியில் 4 காதுகளுடன் காணப்படும் அதிசய பூனை



துருக்கியில் 4 காதுகளுடன் காணப்படும் அதிசய பூனையொன்று கண்டறியப்பட்டுள்ளது.

ரஷ்யன் புளூ வகையைச் சேர்ந்த இந்தப் பூனையை கேனி டோஸ்மெஸி என்ற பெண்மணி தனது நண்பரின் தோட்டத்தில் கண்டெடுத்தார். அது நான்கு காதுகளுடன் இருப்பதை கண்ட அவர், அதற்கு மிடாஸ் என்று பெயரிட்டு தனது வீட்டில் வளர்த்து வருகிறார்.

நான்கு காதுகள் இருப்பதால் ஏதோ சூப்பர் பவர் கேட்கும் திறன் அந்த பூனைக்கு இருப்பதாக யாரும் கருதவேண்டாம் என்றும் மற்ற பூனைகளை போலவே அது சாதாரணமாக நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் கேனி தெரிவித்துள்ளார்.

## வீதியில் சமோசா விற்கும் ஆப்கான் செய்தியாளர்




ஆப்கனில் பல தொலைக்காட்சி நிறுவனங்களில் தொகுப்பாளராகவும், செய்தியாளராகவும் பணியாற்றியவர், இன்று வீதியில் அமர்ந்து சமோசா விற்பனைசெய்யும் நிலைக்கு ஆளாகியுள்ளார்.

ஆப்கனிஸ்தானில் கடந்த ஆண்டு தலிபான் ஆட்சி அமைந்தது முதல், பொருளாதார நிலை மோசமடைந்து வருகிறது. உணவுத் தானியங்கள் உற்பத்தி குறைந்து, விலைவாசி உயர்ந்துள்ளது. பெண்கள் பாடசாலைக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

முந்தைய அரசுக்கு ஆதரவாக செயற்பட்டவர்களை தலிபான்கள் களையெடுத்து வருகின்றனர். இதனால் ஏராளமானோர் வேலையிழந்துள்ளனர். அவர்களில் ஒருவர்தான், மூசா முகமது. பல தொலைக்காட்சி நிறுவனங்களில் தொகுப்பாளராகவும், செய்தியாளராகவும் பணியாற்றிய அனுபவம் இவருக்குள்ளது.

இந்நிலையில், அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். வேறு நிறுவனங்களிலும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. அதனால் குடும்பத்தையும், நோய்வாய்ப்பட்ட தாயையும் காக்கவேண்டி வீதி வீதியாக சமோசா உள்ளிட்ட உணவு வகைகளை விற்பனைசெய்யத் தொடங்கிவிட்டார். இவரது பரிதாப நிலை, சமூக ஊடகங்களில் வேகமாக பரவியது. இதைப் பார்த்த ஒருவரது முயற்சியால், மூசா முகமதுவுக்கு வானொலி நிலையத்தில் வேலை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, ஆப்கனில் தலிபான் ஆட்சியில் ஊடகவியலாளர்களின் வாழ்க்கை மிக மோசமாகிவிட்டதாக, காபூல் பல்கலை பேராசிரியர் கபிர் ஹக்மால் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ் - இத்தாலியை வாட்டும் வெப்ப அலை: ஐரோப்பிய நாடுகளில் அதிகரிக்கும் காட்டுத் தீ

### காடுகள் எரிந்து நாசம்; மக்கள் அவதி



பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் வெப்ப அலை வீசிவரும் நிலையில், ஐரோப்பிய நாடுகளில் காட்டுத் தீ பரவல் அதிகரித்து வருகிறது.

பருவநிலை மாற்றம் காரணமாக பிரான்ஸின் பல நகரங்களில் வெப்ப அலை வீசி வருவதையடுத்து, அனைத்து துறைகளுக்கும் உயர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகள் தயார் நிலையில் இருப்பதை உறுதிசெய்ய அறிவுறுத்திய அந்நாட்டு அரசு, சிறப்பு உதவி எண்ணை அறிவித்துள்ளது.

அதேசமயம் ஸ்பெயினில் ஏற்பட்ட காட்டுத் தீயால் 9 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவிலான காடுகள் எரிந்து சேதமடைந்ததுடன், 3,200 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

## வார இறுதி சைக்கிள் சவாரி: இடறிவீழ்ந்த ஜோ பைடன்





அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், அவரது மனைவி ஜில் பைடனும் வார இறுதி விடுமுறை நாட்களை சொந்த ஊரான டெலாவரில் தங்கி செலவிடுவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

அதன்படி, நேற்றுமுன்தினம் பைடன், ஜில் இருவரும் டெலாவரிலுள்ள ரெஹேபோத் கடற்கரை வீட்டில் தங்கி ஓய்வெடுத்தனர். பின்னர் அங்குள்ள கடற்கரை வீதியில் மக்களோடு மக்களாக பைடன் சைக்கிள் ஓட்டினார். தலையில் ஹெல்மெட் அணிந்தபடி பைடன் சைக்கிள் ஓட்டியதை, வீதியோரத்தில் நின்றபடி பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். அப்போது, கேப் ஹென்லோபன் பூங்கா அருகே மக்களை சந்தித்து பேசுவதற்காக பைடன் சைக்கிளின் வேகத்தை குறைத்து நிறுத்த முயன்றார்.

அந்த சமயத்தில் சைக்கிளில் பெடலில் கால் இடறி பைடன் நிலை தடுமாறி கீழே வீழ்ந்தார். இதைப் பார்த்த பொதுமக்கள் பரபரப்பாகினர். உடனடியாக அங்கிருந்த பைடன் பாதுகாப்பு வீரர்கள் விரைந்து வந்து அவரை தூக்கிவிட்டனர்.

"எனக்கு அடிபடவில்லை. நன்றாக இருக்கிறேன்" என பைடன் சுதாரித்துக்கொண்டு மக்களிடம் பேசினார்.

பைடனுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை, அவருக்கு மருத்துவ சிகிச்சையும் தேவையில்லை என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. 79 வயதாகும் பைடன் வெள்ளிக்கை தனது மனைவி ஜில்லுடன் 45ஆவது திருமண விழாவை கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

## ஆணிகளால் ஓவியங்களை உருவாக்கும் நைஜீரிய இளைஞர்



நைஜீரியாவை சேர்ந்த 27 வயது இளைஞரொருவர் இரும்பு ஆணிகளைக்கொண்டு அற்புத ஓவியங்களை உருவாக்கி வருகிறார்.

அண்மையில் இவர் நைஜீரியாவின் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகரின் ஓவியத்தை மொத்தம் 55 ஆயிரம் ஆணிகளைக் கொண்டு உருவாக்கியுள்ளார். இவரது ஓவியங்கள் 700 டொலருக்கு மேல் அதன் வடிவம் மற்றும் அளவை வைத்து விலை போகின்றன. ஒரு ஆணி ஓவியத்தை உருவாக்க 3 மாதங்கள் வரை ஆகும் என்று அந்த இளைஞர் தெரிவிக்கிறார்.

# பொருளாதார நெருக்கடி காரணமாக கொவிட் சூழலைவிட மோசமான சவாலை எதிர்நோக்கியிருக்கும் கல்வித்துறை



• 2020ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களின் கல்வி இழப்பு 54 வீதம். 2021 ஒகஸ்ட் ஆகும் போது 88 வீதமாக அதிகரிப்பு

• பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்கும்போது இழக்கப்பட்ட கல்வி நேரத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு பணிப்புரை




## கோபா குழுவிடம் கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டு

ஒட்டுமொத்த கல்வித்துறையும் தீவிரமான மற்றும் சிக்கலான செயன்முறையைக் கடக்க வேண்டியிருப்பதாகவும், கொவிட் சூழ் நிலையைவிட பொருளாதார நெருக்கடியினால் தோன்றியுள்ள நிலையை முகாமைத்துவம் செய்வது சிக்கலாகியுள்ளது - என கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரத்னசிங்க, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் தற்போதைய கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் கல்வித்துறையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் கூடியபோதே கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்களம், கல்வி வெளியீடுகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

குறிக்கப்பட்ட நாட்கள் பாடசாலைகளை நடத்த முடியாமல்போனமையால் வரையறுக்கப்பட்ட காலத்தில் பாடத்திட்டத்தைப் பூர்த்திசெய்ய முடியாமை, தற்பொழுது நிலவும் எரிபொருள் பற்றாக்குறை, பிள்ளைகளின் குடும்பங்களில் காணப்படும் பொருளாதார நெருக்கடி, பெற்றோர் வேலைகளை இழக்கும் நிலை போன்ற மோசமான சூழ்நிலை காணப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கிராமங்களில் பல்வேறு சிரமங்கள் இருப்பதாகவும், ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பிப்பது மாணவர்களுக்கு வெற்றிகரமான முறையாக இருக்காது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்வி அமைச்சுக்கான ஒதுக்கீட்டுத் தொகை போதுமானதாக இல்லை என்பது மற்றுமொரு பிரச்சினை என்றும், அரசாங்க ஆதாரங்களுக்கு அப்பாற்பட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்படவுள்ள யுனிசெப், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற திட்டங்களின் நிதியை மறுசீரமைக்க முன்னுரிமைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் பாடசாலைகள் நடத்தப்படுவதால் முழுமையான பாடநெறிகளைப் பூர்த்திசெய்ய முடியாமை பரீட்சையுடன் தொடர்புபட்ட விடயம் என்பதால் பாடத்திட்டத்தின் எல்லையைக் குறைப்பதற்கான அவசியம் குறித்தும் குழு கவனம் செலுத்தியது. இல்லாவிட்டால் மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் கடுமையான அழுத்தங்களுக்கு ஆளாக நேரிடும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

2020 ஆம் ஆண்டில் மாணவர்களின் கற்றல் இழப்பு 54 வீதமாகவும், 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமாகும்போது இந்த எண்ணிக்கை 88 வீதமாகக் காணப்பட்டது என்றும் இங்கு புலப்பட்டது. இவ்வாறான நிலையில், பரீட்சைகளின்போது உரிய கற்றல் இழப்பைக் கருத்திற்கொண்டு மாணவர்களுக்கு அநீதி இழைக்காத வகையில் வினாத்தாள்களைத் தயாரிக்க பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை குழு வலியுறுத்தியுள்ளது.

தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன ஒருங்கிணைந்து இது தொடர்பில் கொள்கை ரீதியான முடிவொன்றை எடுக்குமாறு குழு பரிந்துரைத்தது.

தற்போது நிலவும் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்திற்கொண்டு மாணவர்களை அருகிலுள்ள பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கும் முறை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதனை இந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிவரை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அனைத்து சிரமங்களுக்கு மத்தியிலும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை உரிய முறையில் நடத்தியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் மற்றும் ஏனைய அனைத்து அதிகாரிகளையும் குழு பாராட்டியுள்ளது. கொவிட் சூழ்நிலை மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கல்வித்துறையை பராமரிப்பதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அனைத்து ஆசிரியர்கள் உட்பட கல்வி அதிகாரிகளையும் குழு பாராட்டியது.

தற்போதைய கொவிட் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் பல்கலைக்கழக அமைப்பிலுள்ள பிரச்சினைகள் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது. எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு போன்ற சிரமங்களை எதிர்கொள்வதால் பிரயோக ரீதியான பரீட்சைகளுக்கு மாத்திரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அழைக்கப்படுவதுடன், ஏனைய விரிவுரைகள் ஒன்லைன் ஊடாக நடத்தப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியில் நடைமுறைப்படுத்தப்படும் 100 மில்லியன் டொலர் திட்டத்தை தற்போது நிலவும் நெருக்கடியின் மத்தியில் நல்ல முறையில் பயன்படுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு பரிந்துரைத்தது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன, மொஹமட் முஸம்மில், திஸ்ஸ அத்தநாயக்க, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, சிவஞானம் ஸ்ரீதரன், ஹரினி அமரசூரிய, உப்புல் கலப்பதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குவைத் தூதுவருடன் அமைச்சர் நஸீர் அஹமட் கலந்துரையாடல்



குவைத் தூதுவர் ஹலாப் எம்.எம்புதைரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட், இலங்கையின் சுற்றாடல்துறையை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், வாயுக்களின் வெளியேற்றத்தால் சூழல் மாசடைவதை தடுக்க முடியாவிடினும் குறைக்கும் உபாயங்களை அடையாளம் காண்பதன் அவசியம் குறித்தும் தூதுவருடன் கலந்துரையாடினார். இவ்விடயத்தில், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவாடலில் ஏற்படவுள்ள சாதகங்களையும் இருவரும் பரிமாறிக்கொண்டனர்.

இயற்கை சக்திகளால், சுற்றாடல் அடையும் அனுகூலங்கள் மற்றும் இதனால் ஏற்படும் கழிவுகளை மனித நுகர்வுக்கு உகந்ததாக்குவது குறித்தும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், புதுப்பிக்கத்தக்க சக்திகளைக்கொண்டு அடையச்சாத்தியமான வழிகளிலும் கவனஞ்செலுத்தப்பட்டது.

இயற்கை அருட்கொடைகளை மானிட நுகர்வுக்குப் பயன்படுத்தி, வீண் செலவுகளை குறைப்பதன் அவசியம் ஏற்பட்டுள்ள காலச்சூழ்நிலை பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வாக குவைத் உதவுவது மற்றும் இத்துறையிலுள்ள அனுபவங்களை பகிர்ந்துகொள்வது மற்றும் இலங்கையில் முதலிடுவதன் மூலம் உள்ளூர் தொழில் வாய்ப்பு, துறைசார் தேர்ச்சிகளை பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்குமாறும் அமைச்சர் நஸீர் அஹமட் கேட்டுக்கொண்டார்.

மேலும், இரு நாடுகளுக்கிடையிலும் நீண்டகால உறவுகள் நிலவ புரிந்துணர்வுடன் செயற்படுவதற்காகவும், இயற்கை அனர்த்தங்கள், அவசர தேவைகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின்போது குவைத் நேசக் ரம் நீட்டி உதவுதற்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

# ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் மிஹிந்தலையில் சந்தேக நபர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள் ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவரை மிஹிந்தலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மிஹிந்தலை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் மிஹிந்தலை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் மிஹிந்தலை, அசோக்கபுரம் பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட 30 வயதுடயவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளி லிருந்து தெரியவந்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொண்டதன் பின்னர் சந்தேக நபர் பணத்தினை வழங்கியபோது அந்த நாணயத்தாள் போலியானது என எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களினால் உணரப்பட்டதையடுத்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அநுராதபுரம் நீதிமன்றில் பீ அறிக்கையுடாக தெளிவுபடுத்தப்பட்டதன் பின்னர் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபரை இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# புனித பொசன் போயா தினத்தில் ஜாதக்க கதைகள் ஒலிப் புத்தகம் வெளியீடு

இந்திய - இலங்கை இராஜதந்திர உறவின் 75 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, புனித பொசன் போயா தினத்தில் அநுராதபுரம் ருவான்வெலி மஹா சேயா வளாகத்தில் ஜாதக்க கதைகள் ஒலிப் புத்தகம் சிங்கள மொழியில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கட்புலன் பாதிப்புடையவர்கள் பயன்பெறுவதனை இலக்காகக்கொண்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள இந்த தொகுப்பானது 50 ஜாதக்க கதைகளைக் கொண்டுள்ளதுடன், ஜாதக்கட்டா கதைகள் என்ற தொகுப்பிலிருந்து நல்வழி என்ற தொனிப்பொருளின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பிரிவின் கவுன்சிலரும் உயர்ஸ்தானிகராலய தலைமை அதிகாரியுமான டாக்டர் சுஷில் குமார் இந்த ஒலி வடிவத்திலான நூலின் முதல் தொகுப்பினை சங்கைக்குரிய மஹாசங்கத்தினரிடம் கையளித்தார்.



சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமகால இந்திய கற்கைகளுக்கான நிலையம் ஆகியவற்றின் ஒன்றிணைவில் இந்த ஒலிப் புத்தகம் வடிவமைக்கப்பட்டதுடன், அதிவணக்கத்துக்குரிய ரம்புக்கணை சித்தார்த்த தேரர் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் ரேவந்த் விக்ரம் சிங், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமகால இந்திய கற்கைகள் நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் உபுல் ரஞ்சித் ஹேவாவிதானகமகே, டாக்டர் டபிள்யூ.ஏ.அபேசிங்க உள்ளிட்ட பலரின் மேற்பார்வையுடனும் தொலைக்காட்சி மற்றும் வானொலி தொகுப்பாளர் வத்சலா சமரக்கோனின் பங்களிப்புடனும் இந்த ஒலிப் புத்தகம் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் காணொளி மூலமாக சிங்கள மொழியில் உரையாற்றியிருந்த உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, அறநெறிப் பிரசங்கமாகவே இந்த ஜாதக்க கதைகளின் ஒலிப் புத்தகமானது இந்திய மக்களால் இலங்கை மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். ஜாதக்க கதைகள் உட்பட்ட பௌத்த மரபானது இந்தியாவிற்கும் பல நாடுகளுக்கும் இடையில் ஒரு முக்கியமான நாகரீக பிணைப்பை உருவாக்கியது என்று இங்கு சுட்டிக்காட்டியிருந்த அவர், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிடமிருந்து பௌத்தத்தை பரிசாகப் பெற்ற முதல் நாடுகளில் இலங்கைக்கு மிகவும் சிறப்பான இடம் உண்டு என்றும் குறிப்பிட்டார். மேலும், இதேபோன்ற முன்னெடுப்புகள் இரு அயல் நாடுகளுக்கும் இடையே பொதுவான கலாசார, பாரம்பரிய மற்றும் மக்களிடையேயான பிணைப்புகளை வலுப்படுத்த உதவும்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பௌத்த உறவுகளை வலுவாக்க இந்திய அரசாங்கம் அண்மைக்காலத்தில் பல நடவடிக்கைகளை எடுத்துவருகின்றமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில்கொள்ளப்பட வேண்டியதாகும். பௌத்த உறவை மேம்படுத்துவதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சிறப்பு நன்கொடை, 2021 ஒக்டோபரில் புனித 'வப் போயா' நாளில் இலங்கையிலிருந்து புனித நகரமான குஷி நகருக்கு சர்வதேச விமான சேவையின் அங்குரார்ப்பணம்' 2021 ஒக்டோபரில் வஸ்கடுவா ராஜகுரு ஸ்ரீ சுபுதி மஹா விஹாரையில் உள்ள புனித கபிலவஸ்து புத்த சின்னங்கள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருந்தமை உட்பட பல்வேறு திட்டங்கள் இவற்றில் உள்ளடங்குகின்றன.





களுத்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட அறப்பலாகந்தை, களு/பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களான வேதநாயகம் தங்கவேல் மற்றும் திருமதி ராஜேஸ்வரி நடராஜா ஆகியோரின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் அண்மையில் தொடங்கொட கிராண்ட் மவுன்டன் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், களுத்துறை கல்வி வலய தமிழ்ப் பிரிவு பிரதி கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வரலாற்றில் முதல் முறையாக மூன்று நாடுகளில் உலகக்கிண்ணம்

# பதினேழு மைதானங்கள் தெரிவு




ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடருக்கான மைதானங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி 11 மைதானங்கள் அமெரிக்காவிலும், மெக்சிக்கோ மற்றும் கனடா ஆகிய நாடுகளில் 3 மைதானங்களும் போட்டிகளுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

வரலாற்றில் முதல் முறையாக உலகக்கிண்ணத் தொடரை 3 நாடுகள் இணைந்து நடத்துகின்றன. அமெரிக்கா, மெக்சிக்கோ மற்றும் கனடா நாடுகளில் 2026ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. அமெரிக்காவில் நியூயோர்க்கின் மெட்லைஃப் ஸ்டேடியம், லொஸ் ஏஞ்சல்ஸின் சோபி, டல்லாஸ்-சின், சான் பிரான்சிஸ்கோவின் லெவி, மியாமியின் ஹார்ட் ரொக், அட்லாண்டாவின் மெர்சிடிஸ்-பென்ஸ், சியாட்டிலின் லுமன் ஃபீல்ட், ஹூஸ்டனின் என்.ஆர்.ஜி, பிலடெல்பியாவின் லிங்கன் பினான்சியல் பீல்ட், கன்சாஸ் சிட்டியின், மிசோரி அரோஹெட் மற்றும் பாஸ்டனின் ஜில்லட் ஆகிய 11 மைதானங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மொத்தமுள்ள 80 போட்டிகளில் 60 போட்டிகளை அமெரிக்கா நடத்துகிறது. காலிறுத்திக்குப் பின்னர் அனைத்து போட்டிகளும் அமெரிக்காவில் மட்டுமே நடைபெறுகின்றன. இதற்கு முன்னர் 1994ஆம் ஆண்டு அமெரிக்காவில் உலகக்கிண்ணத் தொடர் நடத்தப்பட்டது.

மெக்சிக்கோவை பொறுத்தவரை குவாடலஜாரா நகரிலுள்ள எஸ்டாடியோ அக்ரோன், மான்டேரியாவின் எஸ்டாடியோ பி.பி.வி.ஏ. பான்கோமர், மெக்சிக்கோ சிட்டியின் எஸ்டாடியோ அஸ்டெக மைதானங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன. மெக்சிக்கோவில் 10 போட்டிகள் நடத்தப்படுகின்றன. அஸ்டெக மைதானத்தில் ஏற்கனவே 1970 மற்றும் 1986இல் உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. மூன்றாவது முறையாக உலகக்கிண்ணப் போட்டி நடைபெறும் முதல் மைதானம் என்ற பெருமையை அஸ்டெக பெறுகிறது.

கனடாவின் டொராண்டோ மற்றும் வான்கூவரில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மெக்சிக்கோவைப் போலவே கனடாவிலும் 10 போட்டிகள் நடைபெறும். கனடாவில் முதல் முறையாக உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெறுகின்றன. முன்புபோல் அல்லாமல் அனைத்து மைதானங்களிலும் இயற்கை புல் தரையில் மட்டுமே போட்டிகள் நடத்தப்படுவதாக பீபா அறிவித்துள்ளது.

# சதுரங்க போட்டியில் திருமலை ஸ்ரீ சண்முகா இந்துக்கல்லூரி முதலாமிடம்

## மாகாண மட்டத்திற்கும் தெரிவு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

அண்மையில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மற்றும் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரிகளுக்கு இடையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியிலேயே ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

மேலும் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் 17 வயது மற்றும் 20 வயதுப் பிரிவினர்களுக்கு இடையில் இடம்பெற்ற போட்டிகளில் ஸ்ரீ சண்முகா இந்துக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# தான் விளையாடிய அணிக்கே தலைமை பயிற்றுவிப்பாளரான சமி



கிரிக்கெட் உலகில் நடைபெறும் இருபதுக்கு 20 லீக் தொடர்களில் ஒன்றான மேற்கிந்திய தீவுகளில் நடைபெறும் கரீபியன் ப்ரீமியர் லீக் தொடரில் இந்த பருவகாலத்துக்கான சென். லூசியா கிங்ஸ் அணியின் புதிய தலைமை பயிற்றுவிப்பாளராக மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் டெரன் சமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக சென். லூசியா கிங்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த எண்டி பிளவருக்கு பதிலாக டெரன் சமி நியமிக்கப்பட்டுள்ளார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரீபியன் ப்ரீமியர் லீக் தொடர் ஆரம்பித்த 2013ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டுவரை சமி தொடரில் விளையாடியதுடன், கடந்த ஆண்டு சென். லூசியா கிங்ஸ் அணியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், தலைவர் பதவியிலிருந்து விலகிய இவர், அணியின் ஆலோசகர் மற்றும் அணி பிரமுகராக நியமிக்கப்பட்டார்.

சமி அணித்தலைவராக செயற்பட்ட காலப்பகுதியில் சென். லூசியா கிங்ஸ் அணி 7 வருடங்களுக்குப் பின்னர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியதுடன், தொடர்ச்சியாக 2 வருடங்கள் இறுதிப்போட்டிவரை முன்னேறியிருந்தது. எனினும், துரதிர்ஷ்டவசமாக கிண்ணத்தை தவறவிட்டிருந்தது.

டெரன் சமி உத்தியோகபூர்வமாக அனைத்துவகை போட்டிகளிலிருந்தும் ஓய்வை அறிவிக்காத நிலையில், தற்போது அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். டெரன் சமி இதற்கு முன்னர் பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் பேஸ்வர் ஷல்மி அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். இந்த ஆண்டுக்கான தொடர் எதிர்வரும் ஒகஸ்ட் 30ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

# இலங்கையை வந்தடைந்த இந்திய மகளிர் அணி





மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் இலங்கை மகளிர் அணியை எதிர்த்தாடும் இந்திய மகளிர் அணி நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்தது.

இந்திய மகளிர் அணியானது, இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஒருநாள் சர்வதேச போட்டி மற்றும் மூன்று இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகள்கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. முதல் தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள மூன்று ஒருநாள் போட்டிகள் எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி நிறைவுக்கு வருகின்றன. இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகள் அனைத்தும் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், ஒருநாள் போட்டிகள் பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

**போட்டி அட்டவணை**

முதல் ரி20 போட்டி – ஜூன் 23 – தம்புள்ள
2ஆவது ரி20 போட்டி – ஜூன் 25 – தம்புள்ள
3ஆவது ரி20 போட்டி – ஜூன் 27 – தம்புள்ள
முதல் ஒருநாள் போட்டி – ஜூலை 1 – பல்லேகலை
2ஆவது ஒருநாள் போட்டி – ஜூலை 4 – பல்லேகலை
3ஆவது ஒருநாள் போட்டி – ஜூலை 7 – பல்லேகலை




# பாலமுனை றைஸ்டார் ரகர் அணி மாகாண மட்ட சாதனையாளர்களாக தெரிவு

(பாலமுனை நிருபர்)

கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண ரகர் விளையாட்டுப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழக அணியினர் கிழக்கு மாகாண சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டு சாதனை படைத்துள்ளதுடன், தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

கிழக்கு மாகாண சம்பியனாக தெரிவுசெய்யப்பட்ட பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழக அணியினரை பாராட்டி வரவேற்கும் நிகழ்வு கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம்.பாயிஸ் ஆசிரியர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஜ்வத், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அமீர் அலி உட்பட கழகத்தின் நிர்வாகிகள், ஆலோசகர்கள், கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.






# ஆஸி. அணிக்கு துடுப்பாட்டத்தில் வலுசேர்த்த ட்ராவிஸ் ஹெட்



சுற்றுலா அவுஸ்திரேலியா அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நேற்று கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூவகையான கிரிக்கெட் தொடர்களிலும் விளையாடுகிறது. முதல் தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றிய நிலையில், அடுத்து ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நடைபெற்று வருகிறது. முதல் இரு போட்டிகள் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி வீதம் பெற்ற நிலையில் மூன்றாவது போட்டி நேற்று நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அவுஸ்திரேலிய அணியில் மூன்று மாற்றங்கள் நிகழ்த்தப்பட இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலகவுக்கு பதிலாக நிரோஷன் டிக்வெல்ல களமிறங்கினார். அதன்படி முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 291 ஓட்டங்களை குவித்தது.

ட்ராவிஸ் ஹெட் ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களை பெற்ற நிலையில், அணித்தலைவர் ஆரோன் பின்ச் 62 ஓட்டங்களையும், அலெக்ஸ் கேரி 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இலங்கை அணியின் பந்து வீச்சில் ஜெப்ரி வெண்டர்சே 49 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 292 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7